# திராவிட நாடு

REGD M 4642

## சுதந்திரம்

"அடிமையின் அலங்கார மாட மாளிகையில் தலை வணங்கி முழந்தாளிட்டு, வாழ்வதைவிட, இடிந்து, பாழடைந்த சுதந்திர இல்லத்தில் வசிப்பதே சிறந்தது."

மூர்.

மலர் 6 ] 13-7-47 [இதழ் 7

## கீறல்!—பிளேட்டில் இல்லை!!

கீறல் விழுந்த கிராமபோன் பிளேட்டின் சத்தம்போல இருக்கிறதாம், திராவிடஸ்தான் வேண்டுமென்று கேட்பவர்களின் பேச்சு! அதுவரையிலே, 'சத்தம் அவர் செவிக்கு வந்ததே' அது போதும். கேளாக்காதாக இல்லாமல், ஏதோ கொஞ்சம் சத்தம் விழுகிறதே, அதுவரையில் கிழ்ச்சிதான்—காது அடியோடு அடைபட்டுப் போகவில்லை, அறைகுறைச் செவிடு மட்டுந்தான், தினசரிக்கு!!

“என்னய்யா திராவிடஸ்தான் திட்டம்? ஹைதராபாத், திருவாங்கூர் முதலிய இடங்கள் தனி அரசுகளாவதைத் தடுக்கக் காணோம். ஆந்திரரைத் தனியாகப் போவதைத் தடுக்கக் காணோம். இப்படித் திராவிடர்கள் சிதறுண்டு போவதை அனுமதித்துக்கொண்டு, திராவிடஸ்தான் என்று பேசுவானேன்? யாருக்குதிராவிடஸ்தான்!’—என்று கேட்கிறது தினசரி.

திராவிடரின் பேச்சுதான் தினசரியின் செவியிலே சரியாக விழவில்லையே! சரியாக விழாததாலே தானே, கீறல் விழுந்த கிராமபோன் சத்தம்போலத் தோன்றுகிறது, உரிமை முரசொலி! பழுது பார்க்கப்படவேண்டிய செவி! விழி சரியாக இருக்கிறதென்ற நம்பிக்கையால், எந்த மேதாவித்தனமான வாதத்தைக் காட்டி, பிரச்னையைக் கேலி செய்யலாம் என்றுதினசரி எண்ணுகிறதோ அந்தவாதத்துக்குத் துளியும் இடமில்லாதவிதமாகப் பெரியார் கடற்கரையில் பேசியிருக்கும் பகுதியை, தினசரியின் பார்வைக்கு வைக்கிறோம்.

“திராவிடநாடு முறையாகப் பிரிந்தால் நாங்கள் 10 கோடி பேர் இருப்போம். நைஜாம், மைசூர், திருவாங்கூர், முதலிய சமஸ்தானங்கள் சென்னை மாகாணம் இங்கெல்லாம் சேர்த்தால் திராவிடர்கள் 10 கோடிக்கு மேலாக இருப்பார்கள்.”

இது, பெரியாரின் சென்னை சொற்பொழிவிலே உள்ளது. திராவிடர்கள், தனித்தனியாகச் சிதறிப் போகவேண்டுமென்பது அவர் நோக்கமல்ல. தனித்தனி அரசுகள் அமைத்துக்கொள்வதிலே அவருக்கு ஆட்சேபனை கிடையாது. ஆனால் அந்த 'அரசுகள்' கூட்டாக ஓர் அமைப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும், வடநாட்டுபொருளாதார ஏகாதிபத்யத்தினிடமிருந்து விலகி. அத்தகைய கூட்டாட்சிக்குத்தான் திராவிடநாடு என்று பெயர். இது திட்டம். தினசரிக்கு, சிந்தையில் கீறல் இருக்கும் காரணத்தால், இந்த விஷயம் தெளிவாகவில்லை. தனக்கு விஷயம் தெளிவாகாததை மறைக்க, நமது இயக்கத்தோழர்களின் பேச்சு, கீறல் விழுந்த கிராமபோன் பிளேட் போல இருக்கிறது என்று எழுதுகிறது. கீறல் இருக்கிறது—பிளேட்டில் அல்ல—கேட்கும் காதில்! பழுது பார்க்கப்படவேண்டிய இடம் அது!!

## இவர்கள் கதி?

இடைக்காலசர்க்காரில், ரயில்வே மெம்பராக உள்ள

டாக்டர் ஜான் மத்தாய்

மத்யசர்க்காரில் வியாபார இலாகாவில் செயலாளர் பதவி வகிக்கும்

சர். N. R. பிள்ளை

சர்க்காருக்கு பொருளாதாரத்துறை ஆலோசகராக உள்ள

டாக்டர் P. J. தாமஸ்

இந்தியாவின் தூதுவராக சீனு சென்றுள்ள

K. P. S. மேனன்

ஆகியோர் திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள் இப்போது சமஸ்தானத்துக்கு வெளியே, வேலைபார்த்து வருகிறார்கள். திருவாங்கூர் தனிநாடு என்று கூறினதற்காக, சென்னை சர்க்கார், சென்னையிலிருந்து சென்று திருவாங்கூர் சமஸ்தானத்தில் வேலை பார்த்து வந்தவரைத் திருப்பி அழைத்துக்கொண்டது போல, இவர்களை, திருவாங்கூர் சர்க்கார், திருப்பி அழைத்துக் கொள்ளுமா? அல்லது மிச்ச இந்தியாவின் சர்க்கார் இவர்களைத் திருவாங்கூருக்குத் திருப்பி அனுப்பிவிடுமோ என்பதுபற்றி, பலரும் யோசிக்கிறார்கள். எத்தகைய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறிய ஆவல் கொண்டுள்ளனர்.

13-ம் பக்கத் தொடர்ச்சி

உதடு தொங்கும், பல்லே இராது, குழல் போன்ற குரல் போய் குலைக்கும் நாய்க் குரல் போன்றது வரும்! இங்ஙனம் அங்கத்தைப் பின்னப்படுத்துவர். குழந்தை வளரும், அத்துடன் கூடவே, கொடியர்கள் செய்த கோணல் சேட்டையின் பயனும் கூடவே வளரும். பிறந்தபோது அழகுதான், வளர வளர வக்கிர ரூபம் வரும்.

இந்த முறை போன்றதுதான் ஆரியம்! கொம்ப்-ரா-ஷி-கோ அங்கத்தை மட்டும், இங்ஙனம் பங்கப்படுத்தும். ஆரியமோ, மனதை இங்ஙனம் சிதைத்துவிடுகிறது. கொடியோரிடம் சிக்கிய குழந்தை தன் இயற்கை அழகை இழந்து கோர உரு பெறுவது போலவே, ஆரியத்திடம் சிக்கிய திராவிடர் கெட்டனர்.

14-ம் பக்கத் தொடர்ச்சி

“மந்திரி! மகரிஷிக்கு, வேண்டிய பொருள் தாரும்” என்பார். மந்திரி, பொக்கிஷத்தைக் காண்பார். இருப்பின் தருவார்! இல்லையேல், மக்களுக்குச்சேதி விடுவார். மக்கள் தருவர். தர, அவர்கள், கஷ்டப்பட்டு இருப்பர், ஆனால் வெளியே கூறார். கூறுவது! பாவம்! குற்றம்!

உழைக்க ஒரு கூட்டம், உண்ண ஓர் கூட்டம்! அலைய ஒரு இனம், அட்டகாசம் செய்ய மற்றொன்று. இதுதான் நிலைமை. இதை மாற்றுவதே நம்கடமை. உண்மை உரிமை அப்போதுதான் உண்டு.


திருத்துறைப்பூண்டி
ஸ்டேஷன் ரோடு டெண்டில்
ஜுலை 16, 17, 18-தேதிகளில்

“பயங்கர இரவு”

நாடகமும்,

ஜுலை 20, 21, 22-தேதிகளில்

“மக்கள் தீர்ப்பு”

நாடகமும் நடிக்கப்பெறும்.

தமிழ்நாடக நிலையத்தார்,
திருத்துறைப்பூண்டி.

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

விலை 2 அணா **திராவிடநாடு** ஆண்டுசந்தா ரூ 7

# ★ அமீர்சந்து காலமுதல்! ★

பெட்டியிலே வைரம், வைடூரியம், முத்து, பவளம், பொன், நகைகள், வராகன்கள் வேறு. வேறோர் பட்டியிலே வீடுவாசல் சொத்துக்களின் உரிமைப் பத்திரங்கள் உள்ளன. ஆடை அணிகள் அலங்கார வகைகள் அடுக்கடுக்காகக் குவிக்கப்பட்டு உள்ள பேழைகள் வேறு. மாடியிலே இவைகள் இருக்க, கூடத்திலே இவ்வளவு செல்வம் படைத்த சீமான் இறந்துகிடக்கிறான். இறந்தவனின் இன்பவல்லி இருதயம் பிளந்து விட்டதென அழுகிறாள் அவன்மீது புரண்டு. சீமானின் செல்லப்பிள்ளைகள் மருண்டு, மனம் உடைந்து கோவெனக் கதறித் துடிக்கின்றனர். ஊரார் கூடுகின்றனர். அதே வேளையிலே சூதும் சூழ்ச்சியும், உள்ள குடும்பம் நிலைகுலைந்து நிற்கிற நேரம் இது என்பது அறிந்த வருமான உற்றார் உறவினரில் சிலர், மெள்ள பேழைகளை அப்புறப்படுத்துவதும், பத்திரங்களைத் திருடுவதும், பூட்டுகளை உடைப்பதும், அகப்பட்டதைச் சுருட்டுவதுமாக இருக்கின்றனர். இழவு வீட்டிலா இது? எனக் கேட்பீர்கள். எத்தனையோ வீடுகளில் நடந்த சேதி!

சீமான் செத்ததுடன் சொத்து இருந்த இடம் தெரியாது மறைய, மக்களை வைத்துக்கொண்டு, இழந்த செல்வத்தை எண்ணி ஏங்கும் விதவையாரும், அவரது சிறுபிள்ளைகளும் பராரியாகியோ, இந்தப் பாதகத்துக்குக் காரணமாக இருந்த பந்துவின் பராமரிப்பை நாடியோ, அண்டிப் பிழைக்க வேண்டி வந்ததுண்டு.

வீட்டின் கதை நாட்டினுக்கும் பொருந்தும். நாதனற்ற நங்கை நாதியிழந்துநிற்பதுபோல், நலன்கள் பிறரால் சூறையாடப்பட்டு கஷ்டமடைவதுபோல் நாடுகளுக்கும் நேரிடுவதுண்டு. குடும்பத்தலைவன் இறந்து வார்சுதார் மைனர்களாக இருக்க நேரிட்டால், குடும்பச் சொத்து கொள்ளை போவதுபோல, நாட்டில், நெருக்கடி, வெளி நாட்டுபடை எடுப்பு, அன்னியரிடம் சிக்குதல் ஆகிய அவதிகள் நேரிடும் காலத்தில், நாட்டு நலன்கள், உரிமைகள், பதவிகள், முதலிய செல்வத்தை, வலுத்தவன், சூழ்ச்சிக்காரன், தன் வசப்படுத்திக் கொண்டு சூது ஏதுமறியாதாரைப் பராரியாக்கி, பஞ்சையாக்கி, பாட்டாளியாக்கிவிடுவான்.

இந்நிலை உலகிலே எத்தனையோ நாடுகளுக்கு நேரிட்டது என்றபோதிலும், இந்தியாவில் ஏற்பட்டதைப்போல வேறு எங்கும் நெஞ்சு வேகும் அளவுக்கு நேரிட்டதில்லை.

நாட்டுச் சுதந்திரம், வீட்டுச் சீமான் மாள்வதுபோல் பிளாசி யுத்தத்திலும் அதற்குப் பிறகு நடைபெற்ற போர்களிலும், பறிபோன போது நாட்டிலே அலங்கோலம் இருந்த நேரம் பார்த்து இங்கிருந்த சூழ்ச்சிக்காரர்கள், நலன்கள் பதவிகள் உரிமைகள் ஆகியவற்றைத் தம் வசப்படுத்திக்கொண்டு உண்மை வார்சுதாரரான நாட்டுப் பழம் பெருங்குடி மக்களை, பாட்டாளிகளாக்கி விட்டனர். சீமானின் செல்வச் சிறார்கள்போல் அன்றிருந்த மக்கள் தமது உரிமை எனும் செல்வம் பிறரால் பறிபோகிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியாத நிலையில் — பருவத்தில் இருந்தனர். இன்றோ பருவம் முதிர்ந்து பக்குவம் ஏற்பட்டு, தான் யார்? தனது முந்நாள் நிலையாது? இந்நாள் இங்ஙனமிருக்கக் காரணம் என்ன? என்பனவற்றைப்பற்றி எண்ணிப் பார்க்கவும் தனது உரிமையைக் கேட்கவும் ஆரம்பித்துள்ளனர். இந்தப் புரட்சியின் பொறிகள்தான் இன்று ஆரியர்—திராவிடர்கிளர்ச்சி. சூழ்ச்சிக்காரக் கூட்டம் பதறுவதற்குக்காரணம் இதுவே.

தந்தை மரணப்படுக்கையில் இருக்கையில் தனதாக வேண்டிய சொத்தைப் பிறர் களவாடிய சேதியை ஆதாரத்தோடு கேட்ட, 'வார்சுதாரன்' மேஜரானதும் "அந்த புஞ்சை நிலம் விற்பனையானதாக இருக்கும் பத்திரம் செல்லாது, அதிலே காணப்படுவது எங்கள் தாயின் கையெழுத்தல்ல, கள்ளக் கையொப்பம்! மேலும் சொத்து பிதுராஜ்ஜிதம், ஆகவே எமக்கே உரியது" என்று வழக்குத் தொடுக்கிறான்.

அதுபோல "நாங்கள் அறியாப் பருவத்தில், இருந்தபோது அநீதிகள் இழைக்கப்பட்டன. உரிமைகள் பறிக்கப்பட்டன. இன்று நாங்கள் பரிகாரம் கேட்கிறோம். உரிமைகளைத் திரும்ப அடையவேண்டும்" என நாட்டுப் பழங்குடி மக்கள்பகுத்தறிவு மன்றத்திலே வழக்குத்தொடுத்துள்ளனர். நாட்டிலுள்ள நானாவிதமான கிளர்ச்சிகளுக்கும் காரணம் இதுதான். தன்னை அறிந்து தனது உரிமை கேட்பவர் தன்மானம் பெற நடத்தும் போர் இது.

குடும்பக் கார்டியனாக நியமிக்கப்படுபவனாவது கூர்ந்த மதியுடன் காரியம் நடத்தி, சொத்து சூறையாடப்படாமல் பார்த்துக்கொண்டாலும் பாதகமில்லை. அதுவுமில்லை. கார்டியனின் கண்ணெதிரிலேயே சூதுக்கார பந்து அகப்பட்டதைச் சுருட்டுகிறான். கார்டியன் கண்டுங்காணாதது போல் இருந்தால் உலகம் என்ன கேட்கும், "உனக்கு என்ன பங்கு கொடுக்கப்படுகிறது" என்றுதானே கேட்கும்.

அதுபோல் நாட்டைப் பரிபாலிக்கும் பொறுப்பிலமர்ந்த பிரிட்டன் நாட்டு உரிமைகள், செல்வம், சீர், சூழ்ச்சிக்காரக் கூட்டத்தால் சூறையாடப் பட்டபோது அதனைத் தடுத்து இருக்கவேண்டும் கார்டியன் என்ற முறையிலே, பிரிட்டிஷ் சர்க்

கார் அங்ஙனம் நடந்தனரா? இல்லை என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுவோம். நாட்டிலே யாருடைய உரிமை யாரால் பறி போகிறது, யாருடைய உழைப்பு எவருக்குச் சுகம் தருகிறது, எவருடைய சொத்தை எவர் தின்று ஏப்பம் விடுகிறார்கள், யார் உழுகிறார்கள் யார் அறுவடையை அனுபவிக்கிறார்கள், என்பதைஅறிய பிரிட்டன் முயற்சிக்கவில்லை. உண்மை தானாக வெளிவந்தபோதும் இந்தச் சூறையாடுதலைத் தடுக்க சிறு விரலையும் அசைக்கவில்லை. ஏன்? அதுதான் ஏகாதிபத்ய குணம்!

நாட்டின் ஆட்சியைப் பிரிட்டன் ஏற்றபோது யாரார் எதெதைத் தமது எனக் கொள்ளமுடியுமோ அவைகளை எல்லாம் எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டனர். சிற்றரசர்கள் சிறு பூபாகங்களையும், சீமான்கள் செல்வத்தையும் பண்ணைகளையும், பார்ப்பனர்கள் மத மிராசு, உயர் ஜாதி உரிமை முதலியனவற்றையும் தமதாக்கிக் கொண்டதை பிரிட்டன் தெரிந்து கொள்ளவில்லையா? தெரிந்தும், நடப்பது நடக்கட்டும் என்று தானே இருந்துவிட்டது.

பிரிட்டன் நமக்கு இழைத்த பெரும் பிழைகளிலே இதனையே முக்கியமானதாகவும், முதன்மையானதாகவும் நாம் கூறுவோம். நாட்டைப் பிடித்ததும் உள்நாட்டுச் சூதுக்காரரின் வேட்டைக்காடாக நாடு ஆனபோது, பிரிட்டிஷார் வேடிக்கை பார்த்துக்கொண்டும், பெரிய கோட்டையைச் சுற்றி சிறுசிறு கோட்டைகளும் அகழியும் இருப்பின் பெரிய கோட்டைக்கு ஆபத்து விரைவில் வராது என்ற அரசியல் தந்திரத்தின் பொருட்டும், தன்னைச் சுற்றிலும் இத்தகைய கோட்டைகள் எழும்புவது கண்டு வாளாவிருந்தனர். அங்ஙனம் எழும்பிய கோட்டைகளிலே பார்ப்பனீயம் பலமானதோர் கோட்டை.

தமது நாட்டினுடைய சீரும்சிறப்பும் வீரமும், சமுதாயத்திலே இழிவுகள் போக்கப்பட்டு ஒரே சமுகமாகி கட்டுப்பாட்டின் மூலம் பலம் பெற்றதனால் கிடைத்த பலன் என்பது தெரியாதா? லண்டனிலே "பார்ப்பனரும் பறையரும் இருந்தனரா? ரோமாபுரி சாம்ராஜ்யத்தில் பெட்ரீஷியன் (Patrician) எனும் உயர்குல உரிமை பேசியோருக்கும் பிளபியன் (Plebian)எனும்தாழ்ந்த குல மக்கள் என்றுகூறப்பட்டுஅழுத்தப்பட்டவருக்கும் நேரிட்ட கடும் போராட்டம் பிரிட்டிஷ் மக்கள் படித்ததில்லையா? இதைவிடக்கோரமானதோர் சமுதாய நிலைமையை இந்நாட்டிலே பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டதும் பலப்படுத்தப்பட்டபோது பார்த்துக்கொண்டிருந்தது நீதியா?

இந்நாட்டுக் கொடுமைகள் எதுவுமே அவர்களின் கண்களுக்குத் தென்படவில்லை என்று கூறிவிட முடியுமா? தக்கர் எனும் கொள்ளைக் கூட்டம் சதி அல்லதுஉடன்கட்டை ஏறுதல் எனும் கொடிய பழக்கம் அவர்கள் கண்களுக்குத் தெரிந்து அவைகளை ஒழிக்கவில்லையா? அதைப்போலவே மக்களின் மனதையே சிதைத்துவந்த பார்ப்பனியம் தென்படவில்லையா? கண்களுக்கு! என்றுதான் கேட்கிறோம். அதைவளரவிட்டதும், அது தம்மை வாயார (மனதார அல்ல!) புகழ்ந்தபோது மகிழ்ந்ததும், "நாட்டை நீர் ஆளும்: மக்கள்மனதைநான்ஆண்டு அவர்களை கூன் உள்ளம் கோண்டோராய் ஆக்கிவிடுகிறேன்" என்று கூறி அங்ஙனமே நடக்கப் பார்த்துக் கொண்டிருந்ததும் பெரும்பிழை அல்லவா என்று கேட்கிறோம்.

ஆரம்பகால முதல் பிரிட்டிஷார் இந்தப்போக்கில்தானே இருந்தனர்!

நாட்டைக் காட்டிக்கொடுத்தார் மீர்ஜாபர் என்று கூறும் தேசியப்பத்திரிகைக்காரர்கள் மீர்ஜாபருக்கும் பிரிட்டிஷாருக்கும் இடையே நின்று மீர்ஜாபரின் மனதைக்கலைத்த தரகன் யார் என்பதை அறிவார்களா? ஆங்கில-ஆரிய ஒப்பந்தம் முதன் முதலாவதாகஅப்போதுதானேஏற்பட்டது!

சரிதம் என்ன? வங்காளத்திலே சுராஜ்-உட்-அவுலா (Suraju-d-daula) நவாபாக இருந்தார். அதுபோது கிளைவ் (Clive) இங்குஇருந்தார். நவாப் பிரிட்டிஷாரை எதிர்த்தார். பிரிட்டிஷார் திகைக்கவேண்டி நேரிட்டது. பிறகு சுராஜ்-உட்-அவுலாவுக்கும் கிளைவின் படைகளுக்கும் போர் நடந்தது. போரிலேதோற்றார் சுராஜ்! காரணம்அவருடையபடைத்தலைவராகிய மீர்ஜாபர் அவரைக்காட்டிக்கொடுத்ததால்! இது தேசியத் தோழர்கள் கூறும் கதை! ஆனால், இடையிலே பொதிந்துள்ளதைஎடுத்துக்கூறினால் இளைஞர்கள், யார்குற்றவாளி என்பதைஉணர்ந்துகொள்ளக் கூடியதுமான சேதி இருக்கிறது. அதை வெளியே கூறுவதில்லை ஏடுகள்.

நவாபுக்கு துரோகமாக மீர்சாபர் கிளம்புவதற்கு தூண்டி தரகுபேசி, பிரிட்டிஷ்காரரான கிளைவிடம்தனது தரகு வேலைக்குப் பணமும் பெற்றுக் கொள்ள பத்திரம்எழுதிப்பெற்றவர் யார் தெரியுமா? அமீர்சந்த் (Amir-chand) என்ற ஓர் பார்ப்பனர்.

கிளைவிடம் இந்த கங்கைக்கரை பார்ப்பனர் சென்று "வங்கநவாபை வீழ்த்த நானோர் உபாயம் கூறுகிறேன் கேளும் துரையே! வங்கநவாபின் வலதுகை போன்றுள்ள மீர்ஜாபருக்கு நான் தூபமிட்டு துரோகம் புரியச்செய்கிறேன். மீர்ஜாபரே; படைத்தலைவன். அவனை நமதாளாக்கிக்கொள்ளின், பிறகு நவாபு பக்கிரியாவான்!" என்று யோசனை கூறினான்.

அதுபோலவே மீர்ஜாபரிடம் சென்று "ஜனாப்ஜீ!, உமது வீரமன்றோ வங்க நவாபுக்கு கவசம்! படைத்தலைவர் நீர்இருக்க, பாராள, சுராஜா? இதோபிரிட்டிஷாருக்கும் சுராஜுக்கும்போர் மூண்டுவிட்டது. இந்த நேரத்திலே நீர் ஏனோதானோ என்று இருந்துவிடும். மறுகணம் வங்கநாட்டு முடி உமக்குத்தான்! நீரே நவாபு" என்று ஆசைமொழி புகன்று மயக்கியதும் அமீக்சந்த் எனும் அந்தணரே!

வங்கநவாபு வதைப்படும் படலத்தில் தரகராக நின்று வங்கத்தை உள்ளபடி காட்டிக்கொடுத்தவர் அந்தப் பார்ப்பனரே! எய்தவன் எய்தால் அம்பு என்னசெய்யும்! எய்தது அமீர்சந்த்! அம்புமீர்ஜாபர்! அம்பை இன்று கண்டிக்கின்றனர் எய்தவனை மறைத்துவிட்டது அந்த வர்க்கம்.

அமீர்சந்த் செய்த தரகுக்கு 30 லட்சம் ரூபாய் கூலி! இந்தப்பெரும் பொருள் தருவதாக கிளைவிடம் கையொப்பமிட்ட பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டார் ஆரிய அமீர்சந்த! ஆனால் ஆங்கிலேய கிளைவ் ஆரியனுக்கும் "பெபே" என்று கூற வேண்டி சிகப்பு மையினால் பத்திரத்தில் கையொப்பமிட்டு அதைச் செல்லாததாக்கி, அமீர்சந்தின் பேராசையில் பிடிமண் போட்டார்.

காட்டிக் கொடுத்ததும் கைக்கூலி வாங்கியதும் யார்? ஆங்கிலேயருக்கு வங்கம் சிக்கவேலைசெய்தது யார்?

(13ம் பக்கம் பார்க்க)

# தேவாலயங்கள்

—●—

நம் நாட்டிலுள்ள கோயில்கள் மடங்கள் ஆகியவற்றைச் சீர்திருத்தி அமைக்க வேண்டுமென்று இன்று அதிகாரத்திலுள்ள அரசியல் தலைவர்களால் பேசப்படுகின்றது. 'புனித இடங்கள்' என்று சொல்லப்படும் கோயில்களும் மடங்களும் சீர்திருத்தி அமைக்கப்பட வேண்டிய நிலைமையையே நாம் பலமுறை எடுத்துக் கூறியுள்ளோம். இன்றைய சர்க்கார் அந்த காரியத்தைச் செய்ய முன் வந்ததை நாம் வரவேற்கிறோமென்றாலும், நம் நாட்டிலுள்ள கோயில்கள் மடங்கள் எந்த நிலைமையில் உள்ளன—அங்கு என்னென்ன நடைபெறுகின்றன—அவற்றை எப்படியெப்படிச் சீர்திருத்த வேண்டும் என்று கண்டறிந்து காரிய மாற்ற முனைவோர், சற்றேறக்குறைய 15 ஆண்டுகளுக்கு முன், சைவப் பற்றுடையவரும், முன்னாள் "திராவிடன்" ஆசிரியராய் இருந்தவருமான தோழர் I'. பக்தவச்லம், பி. ஏ; எம். பி. பி. ஐ; அவர்கள் "தேவாலயங்கள்" என்ற தலைப்பின்கீழ் எழுதிய கருத்துரைகளை கவனிக்கவேண்டும் என்பதற்காக அதனை இங்கு தருகிறோம்.

நம் நாட்டில் கோயில்களுக்கு யாதொரு குறையும் கிடையாது. கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம் என்பது முன்னோர் நம் முதுமொழி. பிள்ளையார் கோயில் தானும் இல்லாத பீடை பிடித்த ஊர் ஏதாயினும் உண்டோ என்பது எனக்குத் தெரியாது. மதிற் சுவரிடிந்த மாரியம்மன் கோயிலாவது புல் முளைத்துப்போன பிள்ளையார் கோயிலாவது ஒன்றேனுமில்லாத 'ஒண்டியடித்தான்' கிராமம் இருக்கவே இருக்காது என்பது என்னுடைய நம்பிக்கை. பண்டைக்காலத்துப் பணக்காரர்கள் கோயில்களுக்கென்று கோடி கோடியாய்ச் செலவழித்தார்கள். கட்டடத்திற்கென்றும் உத்ஸவத்திற்கென்றும் கணக்கு வழக்கில்லாமல் அப்போது செலவானதற்குத் திருவரங்க பெரிய கோயில, தில்லை, [illegible]ந்தக் கோயில், மதுரைக்கோயில்; காஞ்சிக்கோயில் இவைகளே காட்சியாய் நிற்கின்றன. இவைகளல்லாமலும் இன்னும் எத்தனையோ விஷ்ணு கோயில்களும் சிவன் கோயில்களும் நம் நாடெங்கும் விளங்கி வருகின்றன. அக்காலத்து அரசர்கள் கோயில்களுக்கு மானியங்களும் ஸ்வாமிகளுக்கு ஆபரணங்களும் அபரிமிதமாய்க் கொடுத்தார்கள். நித்ய உத்ஸவங்களும் பக்ஷ உத்ஸவங்களும் மாத உத்ஸவங்களும் வருஷப் பிரம்மோத்ஸவங்களுமாக பற்பல திருவிழாக் கொண்டாட்டங்கள் பகிரங்கமாய் நிகழ்ந்துவந்தன. புகைவண்டியில்லாத கட்டை வண்டிக் காலத்தில் எந்தெந்த மூலைகளிலிருந்தோ உத்ஸவத்திற்கென்று வந்து கொண்டேயிருந்த ஏராளமான ஜனங்களுக்குக் கோயிலில் பிரசாதங்கள் கொடுத்து வந்தார்கள். மற்ற வெறும் நாட்களில் ஜீவனத்திற்கென்று தொழின் முறையால் ஊதியந் தேடாது தேவ ஆராதனை செய்தல், வேதாகமமோதுதல், யோகசாதனை புரிதல் முதலிய தத்துவ தரிசனமாகும் உத்தம வழியில் உளஞ் செலுத்தினவர்கட்கு யாதொரு வருத்தமுமின்றிப் போஜன முதலியன நடக்கக்கோயில்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆழ்வார்களும், ஆசார்யர்களும், நாயன்மார்களும், தத்துவ போதகர்களுமாக எங்கெங்கும் இங்கிதம் விளைத்தமையின், ஞானமும் பக்தியும் ஆனந்த நற்குண நவரத்தினாபரணத்திற்கு அழகிய நடுநாயகமாக விளங்கின.

அபிப்பிராய பேதங்கள் அங்குமிங்கும் காணப்பட்ட போதிலும், மூடாவேசமும் மூர்க்கப் பிடிவாதமும் பானைப் பாலையும் ஒரு துளி மோர்போல் பாழாக்கிவந்த போதிலும், மொத்தத்தில், அக்காலத்தில் தேவஸ்தான அமைதி மிக ஒழுங்காகவிருந்தது. அந்த அற்புத ஆண்டுகளில் அதிகாரஞ் செலுத்திய அதிகார புருஷர்களுடைய பக்தியும் ஸ்ரத்தையும் உறுதியும் ஊக்கமும் ஒவ்வொருவரும் மெச்சத்தகுந்த மேன்மையடைந்திருந்ததென்பதை ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்வார்கள். வேத முடிவாகும் போதங்கடந்து, நாத சுகத்தின் நளினத்தையுங்கடந்து, தோற்றங் கடந்து, போற்றிச்செய்வார் பற்பலவிதமாய் ஏற்றங்கூறும் மாற்றங் கடந்து, வீதி வழியே வீதிவிடங்கன் வருவானாயின், ஹா ஹா! என்ன ஆனந்தம்! எத்தனை பேரானந்தம்! எவ்வகை பிரம்மானந்தம்! தத்துவந் தெரியாரும் தன்னையறிவார்கள், உண்மையுணராரும் உத்தமனை உணர்வார்கள், பக்திப் பெருகாரும் பரமானந்தங் கொள்வார்கள்! என்று கூறி வந்தனர்.

இக்காலத்தில் கோயில் என்றால் ஒரு பெருஞ்சோம்பேறி மடமாய் விட்டதென்பதை அறியாதார் யாவரிருக்கின்றார்கள்? வியாக்கியானங்களும் காலக்ஷேபங்களும் அர்த்தந் தெரிந்து அரிய பாடல்களைக் கனிவோடு சொல்லி இனிமை விளைப்பதும் கோயில்களில் காண்பது கூடாமையாய் விட்டன. சகோதரர்களே! நான் சொல்வது பிசகாயின் என்னை மன்னியுங்கள்! என் மனத்திலெழுந்த ஆதராதிசயத்தாலும் உண்மை கூறி உண்மையை விளக்கவேண்டுவது இக்காலத்தில் இங்கு எனக்கு உரிய கடமையென்று உள்ளத்தில் படுவதாலும், என் மனத்தில் எத்தனையோ நாளாய்ப் பதிந்து வதிந்து என் மனத்தை வருத்தி வாட்டிய சில அபிப்பிராயங்களை உள்ளதுள்ளபடியே இப்போது வெளியிடுகின்றேனேயொழிய ஒருவர்மீது எனக்குண்டான மாச்சர்யத்தாலும் மனஸ்தாபத்தாலும் ஈங்கிது சொல்லவந்தேனல்லேன். தற்காலத்தில் அறிவையபிவிர்த்தி செய்வதில் ஒருவரும் நாட்டம் காட்டி நாணயம் விளைக்காது பணத்தால் மாத்திரம் பந்தல் பரப்பி, பேரால் மாத்திரம் தர்மம் நடத்தி, அஞ்ஞான விருளை அமாவாசையிருளாக்குகின்றனர். இந்நாளில் பெருமாள் கோயில்கள் சோம்பேறி மடமாய், திண்ணைத் தூங்கிகள் வண்ணச் சோற்றைப் புசித்து வயிற்றைத் தடவி வாயை விரித்து ஹே என்கிற ஏப்பத்தை விடுவதற்கென்றே அமைந்துவிட்டன. சிவன் கோயில்களில் அனேகம் கோயில் சுடுகாடு என்றதற்கிணங்க, ஜீவனை யொழிந்தாற்போல், ஈசுவரனை யகன்றாற்போல் கோயிலுள்ளாரும் ஆங்கு தொழில் நடத்துவோரும் எல்லோரும் எக்காலத்திலும் தூங்குமூஞ்சிப் பெருமான்களாய் கும்பகர்ணவதாரங்களாய் விளங்குகின்றார்கள். பெருமாள் கோயில்களிலோ கூத்தாழ்வார் செட்டியார் கடை கடை

யாய்த் தளிகைவிட்டால், ஆளவந்தார் செட்டியார் அண்டா அண்டா வாய்த் தளிகைவிடுவார்! அச்சச்சோ! ஈதென்ன விந்தை! அக்கக்கோ; ஈதென்ன கொள்ளை! இவர்கள் போட்டி போட்டுத் தளிகைவிட்டு வயிற்றை நிரப்பி வாட்டந் தீர்க்க வந்ததற்கு யானேதும் முறையிட்டுக் குறைசொல்லவந்தேனல்லேன். ஏன்? இவ்வளவு பணம் செலவிட்டு, இவ்வளவு கஷ்டப்பட்டு, இவ்வளவு சிரத்தை மேற்கொண்டு, இவ்வளவு கோலாகலங் காட்டி, அன்னதானத்திலும் சர்க்கரைப்பொங்கல், புளியோரை முதலிய வன்னதானமிட்டு வயிற்றின் குறையை வாகாய் ஒழிக்க வந்தவர்கள் அறிவின் குறையை ஒழிக்க அரைநிமிஷமாவது சிந்தித்தலாகாதா? அவ்வாறு அவர்கள் செய்வார்களாயின், தத்துவந்திற்கென்றே சித்தம் வைத்து, உண்மையைக் கண்டு பிடிப்பதிலேயே ஊக்கம் நாட்டி ஜோ என்ற உலகக் கூச்சலைப் போ என்றகற்றி தீப்போன்ற பணத்தைச்சிப்போ என்றொதுக்கியோகாப்பியாசங்களும், ப்ரம்ஹ வித்யாப்யாசங்களும் தேவவழி பாடுகளும் சன்மார்க்க அனுஷ்டானங்களும் செய்வதில் தலைபிடுவோர்கள் மேன்மேலும் பிரபலித்துஅன்னோர்கட்கே பெரும்பாலும் அவ் அன்னப்பாங்குகள் உபயோகப்படுமல்லவா?

அப்போதுகுடையைத்தூக்கிக்கும் மேளங்கொட்டிக் கூரத்தாழ்வார் சீடரெனக் குதூகலிக்கும் குப்பனையங்கார் கோயிலை விட்டு க்ளோதிங்போர்டில் வேலை பார்த்துக்கொள்ளவும், பொருளைக்காணாது இருளிலாழ்ந்து வேதஞ்சொல்லும் பேதைப்பிள்ளை விடிய எழுந்து பள்ளிச்சென்றுஅரிச்சுவடி ஆரம்பித்து அறிவை வளர்க்கவும் நேருமல்லவா? அரிச்சுவடி படிக்காதவன் ஆசாரியபுருஷனைப் ஊரை ஏமாற்றி உருப்போடுவிக்க வேண்டுமென்று உடையவரெங்கேனும்உரைத்து வைத்தாரா? ராமானுஜர் பரமதயாளு—புத்தியைக்காட்டிலும், அறிவைக் காட்டிலும் அன்பே பிரதானம் என்பதை நடக்கையிலே காட்டின ஞானபாநு, அவர் சீர்திருத்தஞ்செய்து ஊர் திருத்தஞ்செய்வதில் ஒப்பாரும் மிக்காருமில்லாதபடி உழைத்து உழைத்து உண்மையே நாடி வண்மையே அடைந்தவர். அவர் பக்தியிருந்தாற்போதும் என்றுபறையனைத் தொழுத பரமபுருஷர், ராமானுஜர். இக்காலத்தில் அவர் பேரைச் சொல்லி பிரசாதஞ் சாப்பிட்டுப் பிழைத்துப் போவார் எத்தனை பேர். ராமானுஜர் உபதேசரத்தினத்தை உச்சியிற்கொண்டிருக்கிறார்களென்று நோக்குமளவில், ஐயையோ பரிதாபம், ஒருவரும் கிடையாதென்று ஏற்படுகின்றது. "பண்டைக்குலத்தைத் தவிர்த்துப் பல்லாண்டு கூறுதுமே" என்றும் "குலந்தாங்கு சாதிகள் நாலிலுங் கீழிங்கெத்தனை நலந்தானொன்று மில்லாத சண்டாள சண்டாளர்களாகிலும் வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணர்க்காளாகில்,....அடியார் அடியார் அவர்தம் அடியார்" என்றும் வைணவ ஆழ்வார்கள் கூறியிருப்பதை எந்த தற்கால ஆசாரியரென்று கூறப்படுவோர் அனுஷ்டிக்கிறார்கள்? அப்பளாசாரி சாப்பிடுவதை ஆமவடை ஆசாரிபார்க்கக்கூடாதென்றும்அடுப்பங்கரை அம்மாள் சாப்பிடுவதை துடுப்புக்கை அம்மாள் பார்க்கக் கூடாதென்றும் மாமி சாப்பிடுவதை மருமகள் பார்க்காமலும் மருமகள் சாப்பிடுவதை மாமி பார்க்காமலும் திரையிட்டு அறிவிற்கேமறைவிட்டு, பண்டைக் குலத்தைத் தவிர்ப்பதை விட்டுப் பண்டைக்குலத்தை வெகு சிறிதும் பொருத்தமேயில்லாத இக்காலத்தில் உடும்புப்பிடியாய்ப் பிடித்து அடஞ்சாதிக்கிறார்கள்! ஒரு காலத்தில் சென்னையில் நடந்த ஒரு கருடோத்ஸவ சமயத்தில் ஸ்வாமிக்குப் பிறகே வேதஞ் சொல்லிக் கொண்டு போகிற கோஷ்டியில் ஒரு இருபதுவயது பிள்ளை, கங்கை கொண்டான் மண்டபம் சீக்கிரம் வரவில்லையே, என்று வயிறெரிந்து வாய்விட்டு 'வயிறு பசிக்கிறதே, வயிறு எரிகிறதே' என்று வேதஸ்வரத்தோடு சேர்த்து, அவர் உபய வேதாந்தப்ரவர்த்தகாசாரியர் என்பதைக்காட்ட, வடமொழியோடுதென்மொழியையுஞ் சேர்த்து வாகாய்ப் பாடினர்.

இப்படியெல்லாம் பேசுவதால் நான் வேண்டுமென்றே பிராமணர் மீது குறை கூறுகின்றேனென்று வது நான் ப்ராமணத்வேஷி யென்றுவது என்னை எள்ளி யிகழவேண்டாம். பிராமண ரத்னமாகிய ஸ்ரீ ராமானுஜர் கொள்கைக்கு முற்றும் முரண்பட்டு முறை தடுமாறிப்போகிறதே யென்னும் ஆற்றாமையால் இங்குநான் சிலபல சொல்ல நேர்ந்ததேயன்றி எவரையேனும் குறை வாய்ச்சொல்ல வேண்டு மென்னும் இழிவானஎண்ணத்தினாலன்று. நாலாயிரப் பிரபந்தத்தைச் சேவாகாலஞ் செய்யும்போது, தடுமாற்றஞ் சொல்லுவதாய்க் காணுமே யொழியதமிழ் சொல்வதாய்த் தெரியாது. இன்னோசை தன்னை இயற்கையினுடைய தாய், சந்தப்பெருமை சுந்தரத்தோடியைந்ததாயுள்ள நந்தம் செந்தமிழை, உடல் குழைய உரோமஞ் சிலிர்க்க என்பு நெக்க நெக்குருக, அகங்குழைய மனங்குழைய ஆனந்தத்தேன் பரவ, வந்தார் மனதிலும் வாரார் மனத்திலும் சிந்தாகுலம் நீங்கிச் சீர்மையூற் றெடுக்க, ஆழ்வார்கள் தந்த அருள் செயல்களைப் பூர்ணிமையைக்கண்ட புல்டாக்குகள்போல் அர்த்தந் தெரியாது அதோகதிசெய்வது ஆகாதகாரியமல்லவா, தகாத செயலல்லவா? இத்தகைய குறைகளை ஒழிக்க முயல்வது, தேவஸ்தானத்தில் தர்மமியற்றுவோருடைய திருந்திய கடமையாகும். தேவஸ்தானங்களில் தர்மம் இயற்றுவோரும் தர்மத்திற்கென்று தனஸ்தாபகஞ் செய்வோரும் இச்சீர்திருத்த விஷயங்களில் சிந்தை செலுத்துவார்களாயின், அன்றே, அப்போதே, அக்கணமே, கோயில்கள் வழிபட்டுப் பரமபதவாயில்களாகிவிடும். விஷ்ணு ஆலயங்களில் விகாதம் நீக்குவது போலவே சிவாலயங்களில் செய்யக் கடவ சீர்திருத்தங்கள் அனேகம் உள்ளன.

திராவிட வேதமாகிற திருவாய் மொழி முதலியவைகளுக்கு வைணவ சந்நிதிகளில் மரியாதை செய்வது போலவே சிவசந்நிதிகளிலும் தேவார திருவாசகாதிகட்கு மரியாதை செலுத்தி அவைகளைப் பாராயண கிரமத்தில் வைக்கவேண்டும். தேவகைங்கரியம் செய்வோர்களுக்கும், லௌகிக வியாபாரமில்லாது வைதிகச் செயல்களில் மனஞ் செலுத்தி, தத்துவ ஆராய்ச்சியில் தலையிட்ட பக்தர்களுக்கும் பரதேசிகளுக்கும், ஆகார விஷயத்தில் அகக் கவலைவைக்காது சைவசந்நிதிகளிலும் பிரஸாத ஏற்பாடுகள் அமைக்க வேண்டும். காலேஜ் ஹால்களும் பிரசங்க மண்டபங்களும் இல்லாத காலங்களில் அவ்வக்கிராமங்களில் அவ்வக்காலங்களில் நேரிட்ட வித்வக் கூட்டங்கள் ஆலயங்களிலுள்ள ஆயிரக்கால் மண்டபங்களிலும், வேறு மண்டபங்களிலுமே நடைபெற்று வந்தன. கம்பன்செய்தராமாயணம் கண்ணிய அரங்கர் முன்னே

கவியரங்கேறினதே இதற்குக் கனம் பொருந்திய சான்றாகும். தேவஸ்தான தருமஞ்செய்வோர்கள் இனி மேலாவது அங்கங்கு நடக்கும் உத்ஸவ காலங்களில் வித்வக்கழகம் சேர்த்து அறியாமையை அடியோடே அகற்றுவது அவர்களைப் பொறுத்த அரும்பெரும் கடமையாகிறது. இங்கு இது சம்பந்தமான மற்றொரு விஷயத்தைப் பற்றியும் பேசவேண்டியிருக்கிறது. கோயில் ஏதுக்கு? குளங்கள் ஏதுக்கு? உத்ஸவங்கள் செய்து லக்ஷக்கணக்கான பணம் செலவிடுவதைக்காட்டிலும் அப்பணத்தை வேறுவழியில் உபயோகப்படுத்தி ஆலைகளும் தொழிற்சாலைகளும் அங்கங்கே ஸ்தாபித்து வேலையில்லாதாருக்கு வேலைகொடுத்து பணத்தைப் பெருக்கினால் லாபமாயிருக்கும்.

அதைவிடுத்துசெம்புக்கும்கல்லுக்கும்சிங்காரிப்பு நடாத்திமரவாகனத்தின்மீது பதுமையைவைத்து மத்தாப்பு தீவர்த்தி மகா சொகுசாய்க் கொளுத்தி ஊரைச்சுற்றி வருவது ஏதுக்குப் பிரயோசனம் என்று எத்தனையோபேர் அபிப்பிராயப்படுகிறார்கள். தற்கால தேவஸ்தான காரியங்களில் உத்ஸவஞ்செய்வதும் பிரசாதம் கொடுப்பதும், தாளம்தட்டி மேளம்கொட்டி தமிழன் தலையைத் தட்டிக் கண்ணை மூடிச்சுவரில் முட்டிக்கொள்வதே முழுக்கெட்டிக்காரத்தனம் என்று ஒரு ஆவேசக்கக்ஷியார் கூறுவது போலவே, கோயிலைக் குட்டிச்சுவராக்கி, திருநாளையெல்லாம் வெறும் நாளாக்கி பொழுது விடிந்ததும் வேலைசெய்வதும் தின்பதும் திரிவதும் உண்பதும் உறங்குவதுமாகவேயாய் விடவேண்டுமென்று கூறுவார் உளர்.

சங்கராபரணத்தின் இங்கிதத்திற்பொங்கிப்புளகித்து, பைரவியின் கௌரவத்தில் பரவசம் மிகக்கொண்டு, காம்போதி ராகத்தால் கனிவின் ரசத்தைக் கற்கண்டின் பெருஞ்சுவையை முப்பழத்தின் முதிர் சுவையைப் பருகிப் பருகி நாகவராளி பாடிக்கொண்டு நாகஸ்வரம் கேட்க நானூறு பேர் வருகிறார்கள். முகத்தைக் கண்டு மோகங்கொண்டு, அழகைக் கண்டு ஆனந்த மடைந்து, பூவை மொய்த்து வண்டினஞ் சுற்றுவதுபோல், மின்னற் கொடியாரை அபரஞ்சி நிறத்தாரை கூந்தற்கரியாரை, எண்ணற் கரியாரை, குவளைக் கண்ணாரை, கொவ்வையுண்ணாரை, பானைபானையாய்ப் பாலைக் காய்ச்சி இன்ப ஏடு ஓர் புறம் இனிதின் உறைந்தாலென அந்தரத்துள்ள சுந்தரந்திரண்டு அங்கேவந்து ஆவிர்ப்பவித்த 'அற்புத வேசிகளை' பொற்புடைத் தாசிகளைப் பார்த்துப் பார்த்துப் பரவசங்கொள்ளப் பதினாயிரம்பேர் வருகிறார்கள். வேடிக்கை பார்க்க எத்தனை பேர்! விநோதம் பார்க்க எத்தனைபேர்! சுடர்கொள் ஜோதியை தேவர்களும் முனிவர்களும் தொடருவார்களாயின், ஆனைகளும் குதிரைகளும் பக்தர்களும் பரிஜனங்களும் எண்ணில்லாமலங்கு இடைவிடாமல்நெருங்கிவரக்கேட்பானேன்? ஜோதி ஜோதி ஜோதி சுயம், ஜோதி ஜோதி ஜோதி பரஞ் ஜோதி ஜோதி ஜோதி யென்று சுந்தரத்தீவர்த்திகள் சுடர் விட்டெரிகின்றன! பவளமேனியன் பரமன், செக்கர்வானிறத்தோன் சிவபெருமான், எம்பெருமான் செம்பொன் மேனியன் தம்பெருமான் நம்பெருமானென்று சிவப்பு மத்தாப்புகள் ஜெகஜ்ஜோதியாயெரிகின்றன! பச்சைமாமலை மலை போல் மேனி எம்மண்ணல், ஊனக்கண்ணிற்கும், பச்சை உறுதியழிப்பதைக் கண்டாவது ஞானக்கண்ணிற்குப் பச்சைவண்ணன் நற்பலன் தருவானென்று நாடி நீவிர் நண்ணலாகாதா, ஆடி நீவிர் அகங்

(11-ம் பக்கம் பார்க்க)

## திருந்திய திருமணம்

சென்ற 30—6—47 திங்கட்கிழமையன்று தோழர் இராமநாதனுக்கும், தோழியர் சகுந்தலாவிற்கும், தோழர் கிருட்டின மூர்த்திக்கும், தோழியர் மகாலட்சுமிக்கும் மாயவாத்தை அடுத்த அகரகடகத்தில் திருமணம் நடந்தேறியது.

**தமிழ் நாட்டுக்கு ஓர் அணி.**
**தமிழருக்கு நல் விருந்து.**

# 'தமிழ்க் கலை'

**தமிழ்த் திங்கள் வெளியீடு**
**வெளிவந்து விட்டது.**

**0—4—0**

ஆசிரியர்
**அ. மு. பரமசிவானந்தம்.**
சேத்துப்பட்டு,
சென்னை.

## ஒரு சேதி!

—0—

பெரியாரைக் காங்கிரசில் சேர்ப்பதற்காகத் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜர் விரைவில் பெரியாரைச் சந்தித்துப் பேசுவார் எனத் தெரிகிறது.

## புதிய கல்லூரிகள்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைத் தலைவர், சர். A. இலட்சுமணசுவாமி அவர்களின் அரிய முயற்சியின் விளைவாக,

**காரைக்குடி**
**காஞ்சீபுரம்**
**விருதுநகர்**

ஆகிய இடங்களில் புதிய கல்லூரிகள் தொடங்கத் திட்டம் தயாராகி விட்டது.

**விற்பனைக்கு ஒரு வீடு**

வியாபாரிகட்கு ஒரு வாய்ப்பு.

சென்னை, புரசைவாக்கம் ஹைரோடில், ராக்ஸி தியேட்டருக்கு எதிரில், 148, 148A. என்ற எண்களுள்ள மாடி கட்டிடம் ரூபாய் 35,000க்கு குறைவில்லாத விலைக்கு விற்பனைக்கு வருகிறது.

விவரங்கட்கு:—
10, வேளாளர் தெரு,
புரசைவாக்கம், சென்னை.
என்ற முகவரியில் விவரம் அறியலாம்.

## விடுதலை எப்போதோ!

திரு. வி. கல்யாணசுந்தரனார், திருமதி S. C.C. அந்தோனிப்பிள்ளை ஆகியோரை வீட்டிலேயே சிறைவைத்திருந்த உத்தரவை—அரசாங்கத்தார் இன்று நீக்கிவிட்டனர். விடுதலையானவுடன், திரு. வி. க. விடுத்துள்ள செய்தியில், சென்னை அரசாங்கத்தின் தொழிற்கொள்கை-பாசீசப் பற்றுமிக்க வடஇந்தியாவால் நுழைக்கப்பட்டதாகுமென்றும், அந்த 'வடநாட்டின் கொடிய செல்வாக்கை எதிர்த்து,மறைந்த S. சீனிவாச அய்யங்கார் 1930-லேயே நம்மை எச்சரித்திருக்கிறார் என்றும் கூறியுள்ளார்.

தலைவர்களுக்கு விடுதலை கிடைத்துவிட்டது. B. & C. மில் தொழிலாளர்களுக்கு, அனுபவித்து வரும் கொடுமைகளினின்றும் விடுதலை எப்போதோ?

திராவிட நாடு

காஞ்சி] 13—7—47 [ஞாயிறு

# இதுவே திராவிடம்

✲

"சென்னை நகர்பற்றி எழுந்துள்ள வழக்கு, தமிழர் தெலுங்கர் நட்புரிமைக்குக் கேடு பயக்கும் நிலையைப் பெற்றிருக்கிறது. இது பெரும் தவறான விளைவு. தமிழரும்-தெலுங்கரும், இனம் மொழி--கலை முதலியவைகளால் ஒத்த இயல்புடையவர்கள். இந்த இடை புகுந்த வேற்றுமையைக் களைந்து ஒன்றுபடத் தவறிவிட்டால், என்றும் மீட்கமுடியாத அளவில் இங்கு வடநாட்டின் ஆதிக்கம் ஏற்பட்டுவிடும்."

ஆணிவேர் ஒன்று — அடிமரம் ஒன்று — ஆனால் — கிளைகள்தான் வேறு வேறு. செயற்கை ஒட்டல்ல —இயற்கையின் கூறு. எவ்வளவோ கூறினோம், தமிழர்—தெலுங்கர் திராவிட இனத்தவர் என்று, வரலாற்று நூற்களின் மறுக்க முடியாத சாட்சியங்களைத் துணைகொண்டு. இதனை எள்ளினோர் உண்டு. பழித்துப் பேசினோர் உண்டு. தகாத முத்தமிடும் முறையென முரசறைந்தனர். வீரக் குறைவின் விளைவென விளம்பரஞ் செய்தனர். இன்னோர் நமது சக்தியைக்கண்டு, நாம் கொண்டுள்ள கோட்பாட்டை—திராவிட இனப் பண்பாட்டை—கேலியும் கண்டனமும் செய்தனரே யன்றி, இலட்சியத்திற்குள்ள வன்மையை மறுத்துக் கூறியல்ல.

தமிழர்க்கா—தெலுங்கர்க்கா சென்னை நகர் எனும்வழக்குப் பொருளுடையதாயினும், ஒரே இனமக்களிடம்மனக்கசப்பைவளர்க்கும் போர்ப் பேச்சாகக்கூடாது எனநாம் விளக்கினோம். இருவரின் நட்புரிமைக்கும் கேடுபயக்கும் கருத்தற்றோர் சொல் என எடுத்துக்காட்டினோம். அன்பு முறையில், இனியவை கூறிமுடிக்க வேண்டிய விஷயம் என வாதாடினோம். தலைநகர் யாருக்கு எனும் பேச்சு, திராவிட இனமக்களிடையே உள்ள பிளவைப் பெரிதாக்குமோ, பெரிதானல் திராவிடம் பனியாவின் பண்ணையாகுமே, அதன் பலனக திராவிடம் வறுமையால் வாடுமே என வேதனையால் சில பல கூறினோம். தெளிவு பெருதோர் மிரண்டனர். நாம் நிந்தனைக்குள்ளானோம்.

நாமது போக்கை, மேலே தீட்டியுள்ள பொருளுரை வற்புறுத்திக் காட்டியுள்ளது. இதனை யார் கூறினது? ஆந்திர பிரபா இதழின் ஆசிரியர் நாரலா வெங்கடேஸ்வர ராவ். இதனைத் தோழர்கள் சிந்திக்கவேண்டும். தமிழர்—தெலுங்கர் வேற்றுமையின் விளைவு, வடநாட்டாரின் வாணிப வளத்திற்கே பயன்படும். அதுகாலை சென்னை நகர் தெலுங்கர்க்கும் இருக்காது. தமிழர்க்கும் இருக்காது. மார்வாடிகளின் மாளிகையாக இருக்கும். அரசியலுக்கும் பொருளியலுக்கும் பிரிக்க முடியாத தொடர்புண்டு என்பதை உணர்ந்தால்தான் திராவிட நாடு கேட்பதின் முழு உண்மையையும் உணர முடியும். இதனைத் தோழர் வெங்கடேஸ்வர ராவ் நன்கு உணர்ந்திருப்பதால்தான், தமிழர் தெலுங்கரிடை வளர்ந்து வரும் பகையுணர்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுகிறார். இல்லையேல் வடநாட்டாரின் ஆதிக்கம் அசைக்க முடியாதென்றும் அறிவிக்கிறார். இதனை அப்படியே நாம் ஆமோதித்து, இருவருக்கும் இடையே ஏற்பட்ட கசப்பைத் தொலைக்கப் பாடுபடத் தோழர்கள் உறுதிகொள்ள வேண்டும் என்பதோடு, ஒற்றுமையை உண்டாக்க, திராவிடநாடு திராவிடருக்கே எனும் மூலத்தில் தான் சக்தி பொதிந்திருக்கிறதென்பதையும் நினைவூட்டுகிறோம்.

தலையைக் கொடுத்தேனும் தலைநகரைப்பெறவேண்டியதுதான். அதற்காக நமது வழித்தோன்றல்களின் வாழ்வைக் கருக்கவும், பிடியைப் பிறரிடம் சிக்கவைக்கவும், நாம் தலையைக்கொடுத்துத் தலைநகரைப்பெறுவது கூடாது.

இனம், மொழி, கலை ஆகிய பண்பாடு நம் இருவருக்கும் அடிப்படை எனஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். "திராவிடநாடு" படித்துவிட்டுஅவர் கூறவில்லை இதனை. பேரறிஞர் ஏட்டிலே படித்துள்ளதையே அவர் சொல்லியுள்ளார். இதுவே திராவிடம். இதை மறக்காது செயலாற்றுவோமாக.

* "The Controversy regarding Madras had embbittered the relations between Tamilians and the Andrhras. This was a very unfortunate development. The Tamilians and the Andhras he declared had racial, linguistic, and cultural affinities and if they did not compose their differnces and become united, the balance of advantage in future would irretrievably pass on to the North" 'Hindu,' 10—7—47

## மந்திரி குமாரி

திருவாரூர் தோழர் மு. கருணாநிதி தீட்டிய மந்திரி குமாரி என்றநாடகத்தை, தேவி நாடக சபையார், தற்போது, கும்பகோணத்தில் நடத்தி வருகின்றனர். மக்களின் ஆதரவுக்குப் பாத்திரமான இந்நாடகம், நண்பர் கருணாநிதியின் சொற்சித்திரமாக மட்டுமல்ல, சிந்தனையின் விளைவாகவும் ஏற்பட்டதாகும். தமிழகத்தின் பெருமையை, உலகுக்கு உரைத்திடும் உரிய ஐம்பெரும் காப்பியங்களிலொன்றான குண்டலகேசியை, மூலமாகக் கொண்டு, அந்நாள் அரசர்களின் நிலைமை, அவர்களின் ஆஸ்தான குருக்களின் கோலாகலம், ஆகியவற்றை, அழகாகப் பின்னி, சுவையும் பயனும் தரத்தக்க நாடகமாக்கியுள்ளார்.

மிரட்டும் குரு, மன மருட்சி கொள்ளும் மன்னன், மித்ரபேதத்தை உணரமாட்டாத அமைச்சன், கொள்ளையைக் கலையாக்கிக் கொண்டதாகக் கொக்கரிக்கும், ராஜகுருவின் மகன், இத்தகு பாத்திரங்களினூடே, மந்திரி குமாரி இணைக்கப்படுகிறாள். பிரதாபன் அதுவரை எதை எதையோ களவாடி இருக்கிறான்—இம்முறையோ அவன் அந்தக் கன்னியின் உள்ளத்தைக் களவாடுகிறான்! தூக்கு மேடை ஏறவேண்டியவன், அவளுடைய மணாளனாகி மாளிகையில் வசிக்கிறான். இவ்விதம், நிலை மாற்றங்களை விளக்கும் முறையிலே நாடகம் அமைந்திருக்கிறது. மன்னனுக்கும் நாட்டுக்கும் மனமார உழைத்த ஒரு தளபதி, நாடு கடத்தப்படுகிறான் — தமிழகம் வந்து சேருகிறான்.

நகைச் சுவைக்காகவும் சில கட்டங்கள் உள்ளன. மொத்தத்தில், சுவையுள்ள கதை. இதனைத் தேவி நாடக சபையினர் அழகுற, நடித்துக் காட்டுகின்றனர். ராஜகுருவின் கோலாகலம், குறிப்பிடத் தக்க முறையில் அமைந்திருக்கிறது. சென்ற திங்கள் 30ந் தேதி, இந்நாடகத்துக்குத் தோழர் அண்ணாதுரை தலைமை வகித்து, நடிகர்களையும் கதாசிரியர் கருணாநிதியையும் கம்பெனி அமைப்பாளர் தோழர் ரத்னம் அவர்களையும் பாராட்டிப் பேசினார். தோழர்கள் நெடுஞ்செழியன், கலியாணசுந்தரம் ஆகியோரும், நாடகத்தின் சிறப்பைப பாராட்டிப் பேசியதுடன், நாடகத் துறையிலே ஏற்பட்டுவரும் மறுமலர்ச்சியை விளக்கிப் பேசினர்.

# வேண்டாத விருந்தாளி?

"என்னைப்பார் — அழகைப்பார்—முகவெட்டைப்பார்—கண் ஒளியைப் பார்—கருங்கூந்தலைப்பார்— அதரத் துடிப்பைப்பார்—அன்ன நடையைப் பார்" இப்படிக் கூறிக்கொண்டே ஒருத்தி, ஒருவனை நெருங்கினால் என்ன பொருள்படும்? மொழியிலே மோசம், நடையிலே நாசம், போக்கிலே பொல்லாங்கு, அழகிலே அழிவு, பார்வையிலே பயங்கரம், பொதிந்துள்ளன என்பதைத்தான் விளக்கிக் காட்டும். இதனை உணராத ஆணழகன், வலிய அணைக்கும் சுகம் என நம்பி, அவள் சரசசல்லாபத்திலே சாய்ந்துவிட்டால், சஞ்சலம்வளரும் சாந்தி சமாதியாகும், வாழ்வுவேதனையாகும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பிடி துண்டிக்கப்படும் இந்த நேரத்தில், புதிய விலங்குபோட, விலங்கென உணராமலிருக்க விலங்கிற்குப் பொன்நிறம் பூசி, பரந்த இந்திய உபகண்டத்திற்குப்பரிசாகவழங்குகிறார் அமெரிக்கத்தூதுவர் கிரேடி, இங்கு தொழில் வளர்ச்சிக்காக, தொழில் நுணுக்கம் தெரிந்தவர்களை மட்டுமல்லாமல், தொழில் அரசர்களையே, இந்த உபகண்டத்திற்கு அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யத்தயாராக இருக்கிறாராம். இங்குள்ள தொழில் தலைவர்களுடன், ஒத்துழைத்துத்திட்டம் தீட்டவும்அவர்களுக்குச் சம்மதந்தானாம். அமெரிக்கத்தொழில் தலைவர்களை ஏற்றிவர, அமெரிக்காவில் கப்பலும் ஆயத்தமாக இருக்கிறதாம். அமெரிக்க சர்க்காரின் ஆதரவும் உண்டாம்.

ஆணழகன்மீது அழகிக்கு ஏற்பட்ட அடங்காத காதலைக்காட்டிலும், அதிகமாக அல்லவா இந்த நாட்டின்மீது அமெரிக்காவிற்குக் காதல் பிறந்திருக்கிறது. திடீரென்று ஏற்பட்டதா? இல்லை. பலநாளாக அமெரிக்காவின் உள்ளத்திலே உறைந்துகிடந்த எண்ணம். ஏகாதிபத்திய அணைப்பிலே இந்த உபகண்டம் சிக்கிச்சீரழிந்து கிடந்த காலத்திலேயே அமெரிக்காவிற்கு இந்த ஆசை உண்டு. ஆனால் வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்தியாவில் எடுத்தடிவைக்க அமெரிக்காவை, ஏகாதிபத்தியம் விடவில்லை. தருணம் பார்த்திருந்த அமெரிக்கா, சந்தர்ப்பம்கிடைத்ததும் வந்திருக்கிறது அடுத்துக்கெடுக்க.

ஏகாதிபத்தியம் வெளியேறுவதிலே—இந்தியா சுதந்திரம் பெறுவதிலே—இங்குள்ளவர்களைக் காட்டிலும் அதிக அக்கரை காட்டி வந்திருக்கிறது அமெரிக்கா. 1942-லேயே, உலகப் போர் உச்சநிலையில் இருந்த காலத்தில், தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டு, தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டு, தபால் பெட்டிகள் தீயிடப்பட்டு, 'வெள்ளையர்களே வெளியேறுக' என்று சங்கநாதம் கிளப்பப்பட்டு, விடுதலை வேலை, தவறிய பாதையில் போய்க்கொண்டிருந்த நேரத்திலேயே, இந்த அமெரிக்க கிரேடி துரை இங்கு வந்து, இரும்பு எங்கே கிடைக்கிறது? அப்ரகம் எங்கு அகப்படுகிறது? பொன் விளையும் பூமி எது? எந்தெந்தத் தொழிலுக்கு எவ்வெவ்விடம் ஏற்றது? என்றெல்லாம் ஆராய்ந்து ஆழம் பார்த்த பெருமை—அனுபவம் இவருக்குண்டு. இது மட்டுமல்ல. அன்று அமெரிக்கத் தலைவராக இருந்த காலஞ் சென்ற ரூஸ்வெல்டின்பிரதிநிதியாக வந்துபோன பிலிப்ஸ் துரைகூட, இந்தியாவின் அரசியல் விடுதலைக்காக ஆர்வங் காட்டினர். உள் நாட்டு விவகாரத்தில் தலையிடக் கூடாதெனும் 'உயரிய' சர்வதேசநியதியைக்கூட மறந்து, பிரிட்டிஷ் போக்கை வன்மையாகக் கண்டித்தார். இந்திய விடுதலையில் அமெரிக்காவிற்கு ஏன் இவ்வளவு கவலை?

அமெரிக்க ஒத்துழைப்பின் பலன் சீனவில் மிக விளக்கமாகத் தினம் தினம் தெரிந்த வண்ணம் இருக்கிறது. தொழில் வளமா? இல்லை; உற்பத்திப் பெருக்கமா? கிடையாது; வாழ்க்கைத்தர உயர்வா? ஏற்கனவே இருந்ததிலும் கேவலம்! அமைதி அறியார் அந்த நாட்டுமக்கள் பல காலமாக. ஒரே நாட்டு மக்கள் சுட்டுக்கொண்டுசாக, பகைபட்டுஅழிய, அமெரிக்காவின் ஆர்வமிக்க ஆதரவு ஊக்கமளிக்கிறது. அமெரிக்க—சீன கூட்டுறவு சீனமக்களின் அழிவிற்கே உபயோகமாகிறது. ஆட்சிப்பீடத்தை அலங்கரித்திருப்போர் சிலருக்கு, அவர்களைச் சுற்றித்திரியும் சில சுகபோகிகளின் சொகுசுள்ள வாழ்வுக்கு அமெரிக்காவின் பெரும் உதவிஆக்கமளிக்கிறது. சீனமக்களுக்கு உயிர் போக்கும் அருமருந்தாக அமைந்திருக்கிறது. இதனை ஆராய்ந்துநாம் அறிவு பெறவேண்டும்.

இந்த உபகண்டத்திற்குத்தொழில் வளம் வேண்டியதுதான். புதுப்புதுத் தொழிற்சாலைகள் தோற்றுவிக்கப்படவேண்டியதும் அவசியந்தான். இங்குள்ள இயற்கைப்பொருட்களைக் கொண்டு மக்களுக்குத் தேவையான—உபயோகமான பொருட்களை செய்து முடிக்கத்தான் வேண்டும். அதற்காக அமெரிக்கத் தொழில் அரசர்களுடைய— தலைவர்களுடைய கூட்டுறவு முக்கியமானதாகு என்று சிந்திக்கவேண்டும்.

புதிய தொழிற்சாலைகளை நிர்மாணிக்க, தொழில் திறம் படைத்த நிபுணர்கள் தேவையேயன்றி, கூட்டுக் கொள்ளையடிக்க முதல் போடும் அமெரிக்க முதலாளிகள் இங்கு தேவை இல்லை. இதனால் இங்குள்ள தொழிலாளர்களுக்கு—ஏழைஉழவர்களுக்கு—சிறு அளவும் நன்மை ஏற்படப்போவதில்லை. வாழ்க்கைத் தரம் ஒருதுளியும் உயர்ந்துவிடாது. பஞ்சமும் பசியும், இல்லாமையும் வறுமையுந்தான் ஏழைகளுக்குப் பரிசாகக் கிடைக்கப்போகிறது.

இன்று உலகத்தின் தொழிற்சாலையாக இருப்பது அமெரிக்கா. உலகத்திலுள்ள சகல நாடுகளுக்கும் உதவி செய்வதும், உதவி செய்யும் நிலையில் உள்ளதும்அமெரிக்க. இருந்தும், வேலையற்றோர் தொகைபெருகி வருவதும், வேலை நிறுத்தங்கள் எண்ணிக்கையில் ஏறுவதும், அதனைத் தடுக்கத் தொழிலாளர்க்குப் பாதகமான சட்டங்கள் பல இயற்றுவதும் இன்று அங்கு சாதாரண நிகழ்ச்சியாகப் போய்விட்டது. அங்கு உற்பத்தியாகும் பொருட்களுக்கு மார்க்கெட் கிடைக்காமல், தொழிற்சாலைகள் மூடப்பட்டு, தொழிலாளர் வெளியே விரட்டப்பட்டு, பெரியதோர் பொருளாதார நெருக்கடி அமெரிக்காவில் விரைவில் ஏற்படுமென நிபுணர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதன் உற்பத்தி முறை—போக்கு—தன்மை லாபத்தைநோக்கமாகக்கொண்டிருப்பதால், மக்களின் சுகவாழ்வு நிரந்தரமானதாக இல்லாமல், சகலருக்கும் சரி சமத்துவமான சுகம் என்பதும் இல்லா

(11-ம் பக்கம் பார்க்க)

## "எல்லை எனக்கு!"

—o—

"எல்லைப்புற மாகாணம் என்னைச் சேர்ந்ததாகும்!"—என்று ஆப்கன் சர்க்கார் ஒரு மனு—தாக்கீது என்று கூறலாம், அனுப்பி இருக்கிறது, பிரிட்டிஷ் வெளிநாட்டு இலாக்காவுக்கு. காரணம் காட்டாமலா? அல்ல! பல காரணங்கள் காட்டி. அதிலே ஒரு காரணம், என்ன தெரியுமோ? பட்டாணியர்களுக்குச் சுதந்திரம் வேண்டும் என்பதுதான்! எல்லைக் காந்தியும், பட்டாணிஸ்தான்தானே கேட்கிருர்! இரண்டுக்கும் இடையே ஏதேனும் சம்பந்தம் இருக்குமோ! நமக்குத் தெரியாது, அது பெரிய இடத்து விஷயம். யாருக்கோ அதுபோன்ற சந்தேகம் ஏற்பட்டதால், எல்லைக் காந்தி, ஆப்கன் சர்க்காரின் தூண்டுதலாலேதான் பட்டாணிஸ்தான் என்ற புதுத் திட்டத்தைப்பற்றித் திடீரென்று பேச ஆரம்பித்திருக்கிருர் என்று கூறினர். காந்தியார் உடனே கோபித்துக்கொண்டார். எல்லைக் காந்தி மீது குறை கூறுவதை எப்படி காந்தியார் கேட்டுக்கொள்ள முடியும்! அவருடைய கோபம், எல்லைக் காந்திமீது ஏற்பட்டுள்ள வதந்தியைப் போக்குமா? சந்தேகம். வெளிப்படையாக எழுதுகிறது ஆப்கன் பத்திரிகை ஒன்று, எல்லை, ஆப்கனுக்குத்தான்! என்று. பத்திரிகையின் பெயர் '**இஸ்லாம்**.' எல்லைக் காந்தியைத்தான், ஆப்கனிஸ்தான் ஆதரிக்கிறது, ஜின்னுவுக்கு அங்கு செல்வாக்கு கிடையாது என்று முன்பு காங்கிரஸ் ஏடுகள் கூறிவந்தன. இப்போது ஒரு சமயம், 'பல்லவி' மாறக்கூடும்! அடேயப்பா! அவர்களுக்கா தெரியாது இந்த வித்தை!

* * *

வித்தை, பலவிதம் அல்லவா? இந்துஸ்தான், பாகிஸ்தான் என்று இரு பிரிவு ஏற்படுவதைத் தடுக்க என்ன வித்தை கையாளலாம் என்று பெரிய பெரிய தலைவர்களெல்லாம் திகைத்துக்கொண்டிருந்தனர். "அட இழவே! இதுகூடவா தெரியவில்லை. மிக அருமையான வித்தை இருக்கிறதே. இதோ பாருங்கள்" என்று, சுமார் ஐம்பது பேராம், கிளம்பினர் மதுரையில். ஆயுத பலத்தோடுதான். அவர்களுக்கு இன்னமும் அமெரிக்க உதவி கிடைக்கவில்லை. ஆகவே அறிவாள் மட்டுந்தான் ஆயுத பலம்! வெட்டு! குத்து! —என்று வீதி வலம் வந்தனர். உடை! திற! எடு! எறி! என்றனர். எதை? பூட்டியிருந்த கடைகளை உடை! 'அங்கு இருந்த ஆடைகளை எடு—என்றனர். புனிதப் போருக்கு புதுவித்தை அல்லவா இது. ஜூலை 3ந் தேதி மதுரையில் இந்தச் சம்பவம். காங்கிரஸ் — லீக் தலைவர்கள் ரகளை வேண்டாமென்று முன்கூட்டியே அறிக்கைகூட விட்டிருந்தனர். பிரிவினை ஏற்பட்ட இடம், வடக்கே வெகு தொலைவில்! அதைச் சரி என்று ஒப்புக்கொண்டவர்கள், மகாத்மா, ராஷ்டிரபதி, பண்டிதர், ஆச்சாரியார், சர்தார், மௌலானு, போன்றவர்கள். ஆனல், அதற்கு எதிர்ப்பு கிளம்பிய இடமோ, இங்கே, மதுரைமா நகரில். பிரிவினையைத் தடுக்க, மதுரையில் இவர்கள் கையாண்டமுறை போதும் என்றால், வடக்கே உள்ளவர்கள், சுலபத்திலே செய்து, 'பாரத் வர்ஷத்தைப்' பிளவுபடுத்தாமல் தடுத்திருப்பார்களே! அங்கே இருந்தவர்கள், ஆவது ஒன்றுமில்லை என்று இருந்துவிட, இங்கே ஏன், மதுரையில் மண்டை உடை மகாத்மீயம் நடைபெற வேண்டுமோ தெரியவில்லை.

* * *

"பொருள் உற்பத்திபெருகியாகவேண்டும்! நாட்டிலே உள்ள பஞ்ச நிலைமை அப்போதுதான்நீங்கும். ஆகவே, பொருள் உற்பத்தியைத்தடுக்கும் விதத்திலே, தொழிலாளர்கள், வேலை நிறுத்தத்தில் ஈடுபடக்கூடாது." யார் கூறுவது? டாட்டாவா? பிர்லாவா? அவர்கள் ஏன் பேசப் போகிருர்கள்! கருமமே கண்ணுயினுர் அல்லவா! பண்டிதர் பேசுகிருர் இது போல. ஆமாம் சார்! பெய்ஸ்பூர் காங்கிரசிலே, மாஸ்கோவுக்கு மானசீக யாத்திரை செய்த பண்டித ஜவஹரேதான், பேசுகிருர், ஏ! பாட்டாளி மக்காள்! ஓடுங்கள் தொழிற்சாலைக்கு,உற்பத்தி செய்யுங்கள்! என்று. அவர்களுக்குள்ள குறைகள்? கூலிபோதாத கொடுமை? வேலையிலே உள்ள வேதனைகள்? இவைகள் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டாக வேண்டும். பொருள் குவியவேண்டும்! அதே போது பிர்லாக்களுக்கு இலாபம் குவியும்! தொழிலாளிக்கு வறுமை வளரும்! இந்தியாவின் புகழ் ஓங்கும்! இங்கிருந்து தூதுவராக மாஸ்கோ செல்லும் விஜயலட்சுமியம்மையாரைக் காணும்போதெல்லாம், ஸ்டாலினுக்குச் சிரிப்பும் பொங்கும். அண்ணன் மாஜி அபேத வாதி! தங்கை நம் நாட்டுத் தூதுவர்! என்று எண்ணிக் களிப்பார்.

✲

## அது, சரியானவேலை.

—

காக்சார் இயக்கத்தைக் கலைத்துவிடுவதாக, அதன் சிருஷ்டிகர்த்தா, அல்லாமா மஷ்ரீகி, அறிவிக்கிருர். அவர் இதுவரை செய்தகாரியங்களிலே, சபாஷ்! பட்டத்துக்குரிய காரியம் இது ஒன்றுதான். காக்சார் இயக்கத்தைக் கலைப்பதற்கான காரணத்தைக் கூறும்போது முஸ்லீம்களுக்கு புத்துணர்ச்சி ஏற்பட்டு, அவர்களில் குறைந்தது ஒரு இலட்சம் பேராவது காக்சார்களானல் மட்டுமே, மேற்படி இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துவதென்று தாம் திட்டமிட்டிருந்ததாகும், தமது எண்ணத்தின்படி காரியம் நிறைவேறாததால், இனியும் காக்சார் இயக்கத்தைக்கட்டி அழத்தேவையில்லை என்றும் தெரிவிக்கிருர். இந்த முடிவுக்கு அவர் நெடுநாட்களுக்கு முன்பே வந்திருக்கவேண்டும். ஒருதனி மனிதர், தலைவராகவேண்டும் என்பதற்காக, சிருஷ்டிக்கப்படும் எந்த அமைப்பும், கடைசீவரை இருக்க முடியாது. முஸ்லீம்களின் பிறப்புரிமையைக் காப்பாற்ற லீகும், அவர்களைத் தேசியத்துடன் பிணைத்து அதன்மூலம் அவர்களுடைய நிலையைக் காப்பாற்ற தேசிய முஸ்லீம் என்ற பெயருடன் ஒரு அமைப்பும், இருக்கும்போது, அல்லாமா இவை இரண்டுக்கும் இடையே, காக்சார் என்ற குறுக்குச்சால் ஓட்டியிருக்க வேண்டிய அவசியமே இல்லை. ஒரு இயக்கத்தைச் சிருஷ்டித்துவிடமுடியும் என்று எண்ணியது தவறு என்பதை அவர் முன்பே உணர்ந்திருப்பார். ஆனல் இடையில் தேசியப் பத்திரிகைகள் ஜின்னுவுக்குப் பலமான, புதுப்புது, பலவகை,எதிர்ப்பு இருப்பதாகக் காட்டவேண்டும் என்று சூட்சிசெய்தபோது, கொஞ்சம் காக்சார் இயக்கத்துக்கு விளம்பரம் தந்தனர்—அது இதுவரை அந்த இயக்கத்தை நடமாடவைத்தது. இனி அதற்கும் இடமில்லை. ஆகவே அல்லாமா, இனி ஆவது ஒன்றுமில்லை என்று கண்டு, காக்சார் இயக்கத்தை கலைத்துவிட்டார். அதிருப்திகள் நிரம்பி, தேவைகள் அமோகமாகஉள்ள நாட்டிலே, பலவகைப் பூசல்களுக்கேற்ற சூழ்நிலை உள்ள நாட்டிலே, தந்திரக்காரர்கள் தனித்தனி இயக்கம் துவக்குவது எளிது. ஆனல் துவக்கும் இயக்கமெல்லாம் வெற்றி பெறும் என்று கூறமுடியாது. சில நாளைக்குப்பிறகு இயக்கம் எதற்காக இருக்கிறது, என்ன நோக்கம் கொண்டது, அந்த நோக்கத்தின்படி என்னவேலைத் திட்டம் தீட்டிற்று, தீட்டிய வேலைத்திட்டத்தின்படி எந்த அளவு வேலை செய்யமுனைந்தது, என்ற கணக்குப் போடும் காலம், தூபதீபமிடும் தொண்டர்களுக்கும் வந்துவிடும்—வருகிறபோது கலைக்காமல் என்ன செய்வது—ஆகவேதான் காக்சார் இயக்கத்தை அல்லாமா கலைத்துவிட்டார்—அதுதான் சரியானவேலை.

—

7-ம் பக்கத் தொடர்ச்சி

குழையலாகாதா, பாடி நீவிர் பதம் பெறலாகாதா என்று பச்சை மத்தாப்புகள் பரமானந்தமாய்ப் பாடங் கற்பிக்கின்றனவோ!

வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை என்று மூதோர் கூறிய முதுமொழிக்கேற்ப கள்ளங் கபடில்லாத வெள்ளை மனத்தூய்மையை மெள்ள நீவிர் பெறுவீராயின் பக்தி தானே தன்னை அள்ளி அள்ளிக் கொடுக்குமே யென்று வெள்ளை மத்தாப்புகள் வேண்டிய மட்டுங் உபதேசிக்கின்றன! சுற்றிச் சுற்றி யடிக்கும் சூறுவளி யென்ன மெத்த மெத்த வருத்தி, மக்களைச் செத்துச் செத்துப் பிழைக்கச்செய்து பிறப்பு என்கிற சக்கரம், இறப்பு என்கிற மாய்வு இந்தச் சுற்றுச் சுழற்சியில் உருண்டு சுருண்டு உயிர்விட்டு உயிற் பெற்று மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து மாண்டு மாண்டு மண்ணுடன் சேர்ந்து ஊஞ்சலாடுவதென்ன உயிர் வருதலும் போதலுமாக சஞ்சலமாகிற சக்கராகாரத்தில் சாய்ந்து சாய்ந்து சருகாதலைச் சக்கரபாணங்கள் சாகஸமாய்க் காட்டிச் சக்கரத் தண்ணலைப் பணியமிக்க காதலுடன் வேண்டி வினை தீர்க்கின்றன! கீழ்மையகற்றி மேன்மை பொருந்தி உச்சியை நோக்கி உயரப்பாருங்கள். உத்தமனைக்காண்பீர்கள், உன்னத பதவியடைவீர்களென்று வாகான ஆகாயபாணம்பாகான மொழிகளால் யோகானுபவத்தைச் சொல்கிறது. ஒன்றின்பின்னொன்றாகவிடாமுயற்சியோடும் தளரா ஊக்கத்தோடும் பக்தி புரியுங்கள் தவத்தைப் பேணுங்கள், சற்கருமஞ்செய்யுங்கள் என்று சிதைவில்லாப் புதை பாணம் சிந்தையிற் பதிக்கின்றது போலும்!!

மடங்களும் அவைகளின்தொழில்களும் இன்னவென நாம் யோசிக்குமிடத்து, எல்லாத் தருமங்களையும் எல்லாத்தேவாலயங்களையும் கல்வி பயிற்றும் கசடற்ற ஒப்பற்ற தருமங்களையும் வித்வான்களை ஆதரிக்கும் நற்பெருங்கருமத்தையும் கவனித்துக்கணக்கற்ற நன்மைபுரிய வேண்டுபவர்கள் மடாபதிகளே யாவர்என்று ஏற்படுகிறது. சைவமடங்களும் வைணவ டங்களும் எண்ணிலாதன எத்தனையோ லக்ஷக்கணக்கான வரும்படியை வைத்துக்கொண்டிருப்பவை ந இலக்கிய அபிவிருத்தியிலும் தற்கால ஆங்கில தத்துவ தர்க்கசாஸ்திரங்களுக்கிணங்க நம்தத்துவ தர்க்க சாஸ்திரங்களை முறைப்படுத்துவதிலும் மனஞ்செலுத்தி மாண்புடன் கிருபை புரிவார்களா?

மற்றும், அன்னதானம் செய்தல், சத்திரம்சாவடி அமைத்தல், குளம் கிணறு தோண்டல் சோலைகளும் சாலைகளும் பெருகவைத்தல் முதலிய தருமங்கள் ஜனசவுகரியங்களுக்கு இன்றியமையாதனவே. தற்காலத்திய அன்னதான சமாஜங்களும் சோம்பேறி மடங்களாய் விடாமல் பாதுகாத்து வேலைச் சாலைகளாய் அவைகளைமாற்றித்தொழில்செய்யக் கூடியவர்கள் அவ்வவர்கட்குத் தெரிந்தவேலைகளைச்செய்து தொழிற் சாலைக்கு வருவாய் வைக்கவும் தொழில் செய்யமுடியாதுகூன்குருடு நொண்டி சப்பாணி கையொடிந்தோன் காலறுந்தோன் முதலிய அசக்தியுடையவர்கள் தருமத்திற்குப் பாதுகாக்கப் பட்டும் வந்தால் தருமக்கோலின் இப்பகுதியும் பெருமையோடு விளங்கும் என்பது எனது துணிபு.

✻

## ஆசிரியர்களின் அவதி

—

கடந்த 25 நாட்களாக—தங்கள் குறைபாடுகளை நீக்கவேண்டுமென்பதற்காக, வேலைநிறுத்தம் செய்திருந்த—மதுரை நகர சபையைச் சேர்ந்த 575 ஆண்பெண் ஆரம்ப ஆசிரியர்கள் சர்க்காரின் உத்திரவுப்படி நகரசபைக் கமிஷனரால் வேலையிலிருந்து விலக்கப்பட்டு விட்டனர். வேறு ஆட்களை—நியமிக்கவும் முயற்சி நடைபெறுகின்றது.

✻

9-ம் பக்கத் தொடர்ச்சி

மல் — இடையிடையே பொருளாதார நெருக்கடி — உற்பத்தி செய்த பொருளை உபயோகிக்க மக்கள் இருந்தும் அதனை வாங்கும் அளவிற்குப் பணபலம் இல்லாததால் உற்பத்திப் பெருக்கமெனும் மாய வார்த்தை—செய்யும் பொருளுக்கு மார்க்கெட்டில் கிராக்கி உண்டாக்க சேமித்த பொருளைச் சீரழிப்பது—விவசாயப் பொருளின் விலையைக் குறைப்பது—ஏழை உழவர்களின் வயிற்றில் அடிப்பது—செலவாணி நாணயத்தின் மதிப்பை உயர்த்துவது — தாழ்த்துவது போன்ற பொருளாதார ஜால வித்தைகளை, சிலரின் பண ஆசைக்கு—இலாப வேட்டைக்கு மக்களைப் பலியாக்குவது, முதலாளித்துவத்தின் முடிந்த கொள்கை. இந்தச் சரிந்துபோன சாமர்த்திய திட்டத்தைத் தான் அமெரிக்கா காப்பாற்ற கங்கணங் கட்டிக்கொண்டு, ஜனநாயகம், அமேரிக்கப் பண்பாடு, உலகக் கூட்டுறவு என்பன போன்ற கவர்ச்சியுள்ள வார்த்தைகளை, உலகத்திற்கு ஒலி பரப்புகின்றது.

கிரேடியின் ஆசை. வார்த்தையிலே, அமெரிக்க முதலாளிகளின் பணவேட்டை மறைந்திருக்கிறது. பிர்லாவும், டாடாவும் கிரேடியின் கூட்டுறவைப் பெரிதும் விரும்புவார்கள். நிறமோ—நேஷனே குறுக்கிடாது. ஜாதியோ சமயமோ சங்கடந்தராது. பண வேட்டையிலேநாட்டங் கொண்டவர்களுக்கு, பங்கு போடுவதிலே சிறு சிறு வாட்டம் ஏற்படும். இறுதியில் நல்ல முடிவு ஏற்பட்டுவிடும். நிலைமைக் கேற்றபடி நிகரலாபத்தில் பங்கு சரி செய்யப்படும். இந்தப் போக்கில் தொழில் பெருக்கம், மக்களுக்கு வளத்தைக் கொடுக்காது. செல்வத்தினிடையிலே, பலர் கண்களில் நீர் சிந்தும். இத்துடனும் நின்று விடாது இந்த ஆபத்து.

1914—18 போருக்கு முன்பு பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும்போர்க் கருவிகள் கொடுத்துதவிய பெருமை அமெரிக்காவுடையது தான். ஒரு நாடு ஆயுதம் வாங்கினதை மற்றொரு நாட்டினிடம் கூறி, அந்த நாட்டிற்கு விற்றதைக் காட்டிலும் நவீன ஆயுதம் செய்திருப்பதாகச் சொல்லி மற்றொரு நாட்டினிடம் ஆயுத விற்பனையை அதிகமாக்குவதும், இதனையே காரணமாகக் காட்டி முன்னர் வாங்கின நாட்டிற்கு மேலும் ஆயுதம் விற்பதும், வியாபாரநுணுக்கத்தின் சிகரம். இதனை நாம் மறந்துவிடக் கூடாது. பரந்த இந்தியா எனும் எண்ணம் மறைந்துவிடவில்லை. பாகிஸ்தான் அரசும், பலம் பெற்றாகவேண்டும். வியாபாரம் செய்ய வந்த கிரேடிக்கு, இரண்டு அரசிடத்திலும் பாசமும் நேசமும் இருப்பது இயற்கை. கிரேடியின் எண்ணம் நிறைவேறி விட்டால், வெடி மருந்துசாலையில் தீப்பொறி புகுந்ததுபோல் தான். இந்தியாவில் சீனைவைத்தான் பார்க்கலாம். பயங்கரமான காட்சி. வேண்டாத விருந்தாளி கிரேடி.

—

## இரண்டும் வேண்டும்.

ஆளவந்தார்களுக்கு யாராவது "செய்யவேண்டியது இது" என எடுத்துக்காட்டினால், சிந்தனையில் செந்தேள் கொட்டினதுபோல் சீறுகிறார்கள். அதிகாரந்தந்த அடக்குமுறையைப்பரிசாகவழங்குகிறார்கள். சிறைக்கதவு திறந்திருக்கிறது என வழிகாட்டுகிறார்கள். மது ஒழிப்பு, சட்டத்தால்மட்டும் ஒழிந்துவிடக் கூடிய ஒன்றன்று என எடுத்துக் காட்டினர் பல்லோர். குடிப்பழக்கத்தின் தீமையை விளக்கிப் பிரசாரஞ் செய்யவேண்டியது முக்கியம். உயிர் வாழ்வதற்காக உழைக்கும் அளவையும் தன்மையையும்மாற்றி அமைக்க வேண்டும். கல்வியின்மையும் தொலைக்கப்பட வேண்டும். இவ்வளவும் செய்வதோடு நல்லபோலீஸ்காவலும் முக்கியம். ஓரளவிற்கு அதிகாரிகளும் மதுரை வீரர்களாக இல்லாமல் இருக்கவேண்டும். இவ்வளவும் பொருந்தி இருந்தால்தான் மதுவிலக்கு வெற்றி பெற வழிஏற்படும்.

மதுவிலக்குச் சட்டத்தை மீறும் விசித்திரமானவழக்குகள்பலவற்றை நாம் படித்திருக்கிறோம். பகவத் சேவையிலே ஈடுபட்டிருக்கிற ஒரு ஆர்மோனியக்காரர் அடிக்கடி ஆர்மோனியத்தை எடுத்துக்கொண்டு மது விலக்கப்பட்டுள்ள ஜில்லாவிலிருந்து, மதுவிற்கும் பிரதேசத்திற்குச்சென்று வருவார் பலநாட்களாக. இவர் இதுபோலவே பலமுறை சென்று வருவது வழக்கம். ஒருநாள் இவர் சந்தேகிக்கப்பட்டு, ஆர்மோனியத்தைவாசித்துக்காட்டஅதிகாரிகள் கட்டளையிட்டனர். அதிலுள்ள பற்களை அழுத்தினால், எந்தவித ஒலியும் எழவில்லை. பின்னர் ஆர்மோனியப்பெட்டியை உடைத்துப் பார்த்தபொழுது சாராயப்புட்டிகள் நிறைந்திருந்தன. பக்தரின் வேஷம் வெளியாயிற்று.

மற்றொரு விசித்திரமான வழக்கு கள்ளத்தனமாக மதுவிலக்குப் பிரதேசத்திற்குள் கொண்டு வரப்பட்ட சாராயப்புட்டிகள், சம்மந்தப்பட்ட அதிகாரியால் பறிமுதல் செய்யப்பட்டன. சிலநாள் கழித்து,புட்டிகளிலுள்ள சாராயத்தைப் பரிசோதித்துப் பார்த்தபொழுது, காரம் குறைவாக இருந்ததாம். ஒவ்வொரு புட்டியிலும சாராயத்தில்பாதியைஎடுத்துவிட்டுத் தண்ணீர் ஊற்றி நிரப்பி இருந்ததாம். வேலியே பயிரைமேய்ந்தால், பாதுகாப்பு எங்கிருந்து கிடைக்கும்?

சேலத்திலிருந்து ஈரோடு போகிற வண்டிக்கு "ராஜாஜி ஸ்பெஷல்" என்றே முன்னர் மதுவிலக்கின் போது பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. இன்னும் இதுபோன்ற எத்தனையோ விசித்திரங்கள்.

மாகாணம் முழுதும்மதுவிலக்கை அமுலுக்குக்கொண்டு வரவேண்டுமானால் "இப்பொழுது உள்ள போலீஸ் தொகை குறைவானதென்றும், மேலும்பலரைத்தாராளமாகச்சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும், போலீஸ் தலைமை அதிகாரி கூறுகிறார். உண்மைதான்.மேலும்போலீஸ் எண்ணிக்கையைப் பெருக்குவதோடு மட்டும் ஆளுவோர் நின்று விடக்கூடாது. சகல கட்சியினரும் சேர்ந்துள்ள பிரச்சாரக் கமிட்டிகளை ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுத்த வேண்டும். கட்சிப்பிரசாரத்திற்காக அதனை உபயோகப்படுத்தாமல், குறிப்பிட்ட காரியத்திற்குமட்டும் பயன்படுத்தவேண்டும். சட்டம்—பிரச்சாரம் ஆக இரண்டும் இருந்தால்தான் மதுவிலக்கு வெற்றி பெற வழி ஏற்படும்.

—

## நாசத்திற்கு நல்வரவு!

—0—

வரவு கூறுகிறார் நாசத்திற்கு. ஏனென்று கேட்காதே என்று எக்காளமிடுகிறார். கண்ணைக் கட்டிக்கொண்டு ஓடப் பழகிக்கொள்ளுங்கள் எனப் பிரார்த்தனை புரிகிறார். ஆராய்ந்து பார்க்காதீர்களென அங்கலாய்க்கிறார். சிந்தனையைச் செலவழிக்காதீர்களெனச் செப்புகிறார். இவ்வளவும் கூறுவது யார் என எண்ணுகிறீர்களா? சுதந்தரத்தின் சொகுசை — விடுதலையின் விருப்பை— சுவரிலே சித்தரிக்கிறார்களே பேராசிரியர்கள், அந்த ரகத்தினரா இவர்? அவர்களாக இருந்தால்தான் நாம் கவலைபடத் தேவையில்லையே.

அந்த இனத்தைச் சார்ந்தவரல்ல. அரசியல் நூற்கள் பலவும் கற்றுத் தெளிந்தவர். உயிருள்ள சில ஆங்கிலத் தொடர் சொற்களை ஆக்கும் ஆற்றல் உடையவர். ஒரு பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர். இந்தியாவில்ஏற்பட்ட அரசியல்பிணிக்குத் தகுதியான மருந்தென திட்ட வட்டமாகச் சிலவற்றைத் தீட்டிக் காட்டினவர். அவர்தான் நமது சித்தூர் இராமலிங்க ரெட்டிகாரு அவர்கள். அவருக்கென நிரந்தரமான கொள்கை என்றும் இருந்ததில்லை. வேறு வேலை இல்லாத நேரத்தில், ஏதாவது அரசியலில் அள்ளித் தெளிப்பார் தெள்ளுமணிகளென சில. அவைகளிலே ஒன்று, நேரு சர்க்கார் செய்யும் காரியங்களை அலசிப் பார்க்காதீர்கள், எதிர்த்தொன்றும் பேசாதீர்கள் என்பது. இது மக்கள் ஆட்சி முறைக்குப் புறம்பானது என்று, அரசியல் பால பாடம் கற்றவரும் அறிவர். இருந்தாலும் துணைவேந்தர் சொல்லுகிறார், ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். மக்கள் ஆட்சியின் நெளிவு சுளிவுகளைத் தெரிந்தவரே பேசுகிறார் என்றால், சும்மாவா பேசுவார்? மக்களாட்சி, கூட்டாட்சி, ஐக்ய கூட்டாட்சி என்றெல்லாம், இதற்குமுன் ரெட்டிகாரு பேசினதுண்டு. அவைகளுக்கு முரண்பாடாக இன்று பேசுகிறார், பாசீசஆட்சிக்குப்பக்கபலமாக. கண்டிப்பாக இந்தப் பிரசாரம், அவருடைய எண்ணத்தை நிறைவுறச் செய்யும் என்றே நப்புகிறோம். கொயபெல்ஸ் உத்தியோகம் அவருக்குக் கட்டாயம் கிடைக்க வேண்டியதுதான். அரசு ஆக்கக் குழுவிலும் அவருக்கு இடமில்லாமல் போய் விட்டது. இந்திய யூனியனிலாவது பிரச்சாரப் பிரதமராகப் பதவி தர வேண்டும். பண்டிதர் மறந்தாலும், பட்டேல் ரெட்டிகாருவை மறக்க மாட்டார். ஆனால் ஒரு சந்தேகம்! ரெட்டிகாருக்கு அதன் பிறகாவது நிலையான புத்தி இருக்கவேண்டுமே! அதற்கு யார் உத்தரவாதம் செய்வது? கற்றகல்விக்காவது இழுக்கு தேடக் கூடாது என்றநன்மதி இவருக்கு இருந்திருந்தால், நாசத்திற்கு நல்வரவு கூறுவாரா?

## புது கவர்னர் ஜெனரல்கள்

பாகிஸ்தான் பகுதிக்கு ஜனாப் ஜின்னா கவர்னர் ஜெனரலாகவும், மிச்ச இந்தியாவுக்கு லார்ட் மவுண்ட் பேட்டன் கவர்னர் ஜெனரலாகவும் நியமிக்கப்பட்டிருப்பதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டு விட்டது.

## புதுவையில் திராவிட நாட்டுப் பிரிவினை நாள்

1947 ஜூலை முதல் தேதி மாலை 6-30 மணிக்குப் புதுவைச் செஞ்சிச் சாலையில், "திராவிடர் கழகம்" புதுவை, "தன்மதிப்புக் கழகம்" உப்பளம், "மாணவர் மன்றம்" தென் செஞ்சிச் சாலை, "அம்பேத்கார் வசகசாலை" குருசுபதி, ஆகிய கழகங்களின் சார்பில், தோழர் ம. நோயேல் அவர்கள் தலைமையில், திராவிட நாட்டுப் பிரிவினை நாள் ஆதரிப்புக் கூட்டம் நடைபெற்றது. அது சமயம், புலவர், வீர. அரங்கனார் விழுப்புரம், காஞ்சி. கலியாணசுந்தரனார் இருவரும் திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை வலியுறுத்திப் பேசினர். பின்னர் கீழ்க் கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, கூட்டம் இரவு 9-30 மணிக்கு முடிவுற்றது.

4-ம் பக்கத் தொடர்ச்சி

அமீர் சந்த் காலமுதற்கொண்டு ஆச்சாரியார் காலம் வரையிலே, இந்த ஆங்கிலோ ஆரிய ஒப்பந்தம் அடிக்கடி நடைபெறுவது காண்கிறோம்

"நமது ஜென்ம பூமி" எனப்பூரிப்போடு பாடி ஆடும் தோழர்கள், கண்களை அகலத்திறந்து கொண்டு பார்த்துக் கூறட்டும், ஜென்ம பூமியின் நிலைமையை!

அதோ தெரிகிறதே சேரி அங்குதான் ஜென்ம பூமியின் ஆதி குடிகள் இருக்கின்றனர். அவர்களுடன் இருப்பது வறுமை, வாட்டம், பஞ்சம், பிணி, சேறு, செந்தேள்—சிறகொடிந்த பறவைகள் போல், கண்ணிழந்த கன்றுகள்போல், உள்ளனரே, அந்த ஆதிதிராவிடர்கள், இதோ இருக்கும் குளத்திலே நீர் மொள்ளக் கூடாது, தேவாலயம் செல்லக் கூடாது—அங்ஙனம் ஏதேனும் செய்யத் துணிந்தால் "முதலியாரவாள்! இதென்ன கலிகாலம்! பாழாகிறதே! பஞ்சமர் உள்ளே வரலாமா! மகா பாபம், பாபம்!" என்று சாஸ்திரியார் தூண்டுவார், முதலியார் ஆடுவார், முடிவில் சேரி மக்கள் சேரியிலேயே சிந்தை நொந்து வாழ்வார்!

இதை ஒழிக்க சட்டம் ஏற்பட்டிருக்கிறது இன்று. பல காலமாகச் செய்யப்பட்ட கிளர்ச்சிக்குப் பிறகு.

இதோ, முதலியார், நாயுடு, நாயக்கர், கவுண்டர், முக்குலத்தார், முதலிய மற்றவர்களைத் தான் நோக்கு! என்ன அவர்களின் நிலைமை? மாடி வீட்டில் இருக்கிறார்கள், பண்ணை இருக்கிறது என்று கூறுவாய். ஆம்! சிலருக்கு! ஆனால் உப்பரிகையின் பக்கத்திலேயே இருக்கும் குடிசைகளைப் பார். அதோ கட்டை வெட்டும் தோழனைப்பார். அவனது கந்தல் உடையைக் கவனி! கஞ்சிக் கலயத்தோடு வரும் அவனது மனைவியைப் பார்! ஆம்! காசநோய் அவளுக்கு!

செல்வம் படைத்தவரும், வறுமையில் நெளிபவரும் ஓலைக் குடிசையில் ஒண்டியுள்ளவரும், ஒன்று சேர்ந்து, அதோ, அந்த பஞ்சாங்கப் பார்ப்பனரின், பாதம் பணிகின்றனர், பார்! பருப்பும் கரியும் பணமும் தட்சணையாகத் தருவது ஏன் என்று கேள்! பார்ப்பனன், இடது கையால் "ஆசி" கூறுவதைக் கவனி. அந்த ஒரு சமூகம் மட்டும், மேனிவாடாது வாழ்வது எப்படி முடிகிறது, ஆசானாய், குருவாய், தலைவனாய் "கண் கண்ட தெய்வமாய்" இருப்பதன் காரணம் என்ன?

அதோ மலர் சூடி, மஞ்சள் பூசி, திலகமிட்டு, தலையில் நரையும், முகத்தில் நகையும் துலங்க, இருந்து கணவரின் காலைப் பிடித்துக் கொண்டே, பேசும், அம்மையின், மகள், மங்கலமிழந்து, மஞ்சளிழந்து, மலர் அணிய உரிமையற்று, மங்குகிறாள்! மறுமணம் புரியலாமே! தாலி போன அன்றே அவளது இளமையும் அதற்கேற்ற இயல்பும் உணர்ச்சியும், போகவில்லையே, ஏன் காட்டு ரோஜாபோல் கன்னி கவனிப்பார் அற்று கிடக்க வேண்டும் என்று கூறிப்பார். அடுக்கடுக்காக சாத்திரம், வண்டி வண்டியாக வேதம், புராண இதிகாச மேற்கோள் புறப்படும்! ஜாதியைக் கெடுக்காதே, ஆச்சாரத்தைப் பாழாக்காதே, சாஸ்திரத்தை இகழாதே, சண்டாளனாகாதே, நாத்தீகம் பேசாதே—நாயக்கர் கோஷ்டியில் சேராதே—சுடச் சுட சொல் அம்புகள் கிளம்பும்! இதுதான் தோழா, ஆரியம்! இதனைப் போக்கத்தான் நாம் பாடுபடுகிறோம். இதுவும் உனக்குச் சம்மதமில்லையா?

இந்த சமுதாயத்தை இதிலுள்ள இழி தன்மைகளைப் பார்க்குந்தோறும் பார்க்குந்தோறும் பயங்கரமானதோர் புரட்சி ஏற்பட்டு அந்தக்கொடுமைகள் அடியோடு அழிக்கப்பட்டு, பேதங்கள் தரைமட்டமாக்கப்பட்டு புத்தம் புதியதோர் புனிதமான பேதமற்ற சமத்துவ சமுதாயம் எழாதா என்ற எண்ணம் எவர் மனதிலும் எழும். வன்நெஞ்சமுள்ளோரே இந்த சமுதாய நிலையை மாற்றி அமைக்க முன்வாரார்!

ஒரு அரசன் கொடுங்கோலனாக இருக்கிறான் என்றால் அவனை உருட்ட புரட்சி கிளம்புவதைக்காண்கிறோம்.

ஒரு சில செல்வவான்கள் செருக்குடன் வாழுவது கண்டால் அவர்களின் ஆட்சியை, அழிக்க, அகோரப் புரட்சி கிளம்புவதைக் காண்கிறோம்.

வண்டியில் பூட்டிய மாடு, வலி தாங்காது, காலால் உதைத்து, வாலால் அடித்து முரண்டிப் படுத்துக்கொண்டோ, மூலைவாரியோ, பள்ளத்தில் வண்டியை உருட்டியோ புரட்சி நடத்துவதைப் பார்க்கிறோம்.

புழுவும் கால்மிதி அதிகமானால் துடித்துக் கடிக்கக்காண்கிறோம்.

இந்த சமுதாயத்திலே மட்டுந்தானே ஒரு வகுப்பு அந்த நாள் தொட்டு இன்றுவரை, அத்திரி அகத்தியர் காலந்தொட்டு ஆச்சாரி சாஸ்திரி காலம் வரையிலே மற்ற வகுப்பினரை 'இழி மக்கள்' எனக்கூறி அந்தப்படியே நடத்திவரக் கண்டும், அதன் கொடுமை ஏககாலத்திலே இருதயத்திலே எண்ணாயிரம் ஈட்டிகள் குத்துவது போன்று இருக்கக் கண்டும், உலக நாகரீகம் அறிவின் வளர்ச்சி மனிதத் தன்மையின் மேம்பாடு உலக நிகழ்ச்சிகள் எனும் அறிவுச்சுடர்கள் அனேகம் வீசியும், நீங்காது குறையாது குன்றாது நிலைத்திருக்கக் கண்டும் புரட்சிப் பொறிகள் கிளம்பாது, இருக்கும் நிலை உளது. எங்கேனும் எவரேனும் புரட்சிப் பொறிகளைக் கிளப்பினால், அதனை அணைக்க பலர் வருகின்றனரே! என்னே துர்ப்பாக்கியம்! என்றுதான் பெருங்குடி மக்களுக்கு விடுதலை கிட்டுவது?

அவப்பவத்தைக் குலைத்து அங்கஹீனராகவும் அவலட்சணர்களாகவும் செய்வதையே, "தொழிலாக"க் கொண்ட ஒரு கூட்டம் ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் மூன்று நூற்றாண்டுக்கு முன்னால் வரையில் இருந்தது. அக்கூட்டம், ஸ்பேயின் (Spain) நாட்டிலே அதிகமாக நடமாடியதால், அவர்கள் தொழிலுக்கு, ஸ்பானிய மொழியிலேயே பெயர் தரப்பட்டது. கோம்ப்—ரா—ஷி—கோ—என்ற கோரமான பெயர் அக்கொடுந்தொழிலுக்கு! அவர்கள் வேலை, சிறு குழந்தைகளைத் திருடுவது, சிற்றுண்டியிலே மயக்க மருந்து கலந்து தருவது, சிறார் மயங்கி வீழ்ந்ததும், அங்கத்தை பின்னப்படுத்துவது, பின்னர் குழந்தைகளை விட்டு விடுவது. சீமான்களுக்குள் விரோதம் எனில், ஒரு சீமான் வீட்டுச் சிறுவனை மற்றொரு சீமானிடம் கூலிபெற்று, இங்ஙனம் அக்கொடியோர்கள் செய்வர். கொம்ப்-ரா-ஷி-கோ, எனும் கொடுமைக்கு ஆளாகிவிட்டால், கமலக்கண் குழந்தை கோட்டான் கண்ணனாகி விடும்! பவளவாய்க் குழந்தைக்கு பன்றி வாய் போல் உருவம் ஏற்பட்டுவிடும்! அதிரூப சௌந்தரியாக வேண்டிய குழந்தை அகோர ரூபியாவாள்! முல்லைச் சிரிப்பழகியாக வேண்டியவள் மூதேவித் தோற்றம் பெறுவாள். மூக்கை இராதபடி செய்வர், நாக்கு அறும்படிச் செய்வர்,

(௨-ம் பக்கம் பார்க்க)

# நமது போர்ப் பாதை

—(o)—

இன்றுள்ள இழிநிலையொழிந்து, தம்நாடு விடுதலை பெறவேண்டும் என்கிறோம். அதற்காக என்ன தேவை? அச்சம் நீங்கவேண்டும்! தலை நிமிர்த்தி நடக்க வேண்டும், பிளவு இருத்தலாகாது! உண்மையூற்று பெற்று தோள் நிமிர்த்தி சிந்தைத் தெளிவுடன் மக்கள் வாழவேண்டும். உயர்ந்த எண்ணமும் உருவானசெய்கையும் எழல்வேண்டும்! அந்நாட்டே சுதந்திர நாடு! என்னாடு அந்நிலை எய்துக!

சுதந்திரம் என்றால் அச்சம் நீங்கியமக்கள், ஆண்மையுள்ள மக்கள், சிந்தை தெளிந்து சீரிய கருத்துக் கொண்ட மக்கள், இருத்தல் என்ற பொருள் தக்கதேயன்றி, சுதந்திரம் என்றால் யாரோ ஒரு குறிப்பிட்ட இனத்தவரிலே விரல்விட்டு எண்ணக் கூடிய சிலர் ஆட்சி மண்டலத்திலே கொலுவீற்றிருப்பது என்பதல்ல.

ஆரியர்கள் மக்களிடை புகுத்தியுள்ள கடவுள் சம்பந்தமான கட்டுக் கதைகள் எவ்வளவு மூடத்தனத்தை மக்களிடை வளர்த்துவிட்டது. உண்மை நெறியில் மக்கள் செல்லவொட்டாது தடுத்துவிட்டது. கடவுள் தன்மையை, ஆரியர்கள் கொடுமையுடையதோர் மனப்பான்மையுடன், கொண்ட மட்டிலும் புளுகி, அறிவை அழித்தனர். ஆரியர்கள் கூறிடும் தெய்வ தேவாதிகள் எத்தனை எத்தனை? அவதாரங்கள் எவ்வளவு! அவதாரங்களின் லீலைகள் எத்தகையன! எதையும் விட்டாரில்லை ஆரியர்; தெய்வீகத்தன்மை மனித உருவிலிருந்து மண்வரை, இருப்பதாகக் கட்டுக்கதைகள் தீட்டிவிட்டனர்.

சிவனாரின் வாகனம் ரிஷபம். எனவே அதற்கொரு நமஸ்காரம்! அவர் அணிவது பாம்பு. அரி துயில்வது ஆதிசேஷன், ஆகவே புற்றுக்குள் பால் வார்க்கவேண்டும்.

முருகனுக்கு மயில், விநாயகருக்கு பெருச்சாளி, கேட்டதைத் தரும் காமதேனு, பசு. ஆடும், ஆறுமுகன் அன்றொரு நாள் ஏறியதே; இங்ஙனம் மிருக ஜாதிகளுக்கு; பட்சிகளில் கருடனோ, மகாவிஷ்ணுவின் வாகனம், சேவலோ முருகன் கொடி, காக்கையோ, சனிபகவான் சவாரிக்கு உதவுவது. மரவகைகளிலோ, வில்வம் சிவனுக்கு உதவுவது, துளசி விஷ்ணுவுக்கு, வேம்பு மாரிக்கு மனோகரம் தருவது; மண்ணிலோ, ஒருவிதமானது விபூதி மற்றொன்று நாமம் முன்னது முக்கண்ணனுடையது, பின்னது விஷ்ணுவுக்குஏற்புடையது முக்கண்ணுடையார், சிவனார், பனிரண்டுகண்கள் முருகருக்கு! பிரமனுக்கோ கண்கள் பத்திருந்தன! முக்கண்ணன் கண்டு ஏன் இவ்வளவு கண்கள் என்று கருதியோ என்னமோ ஒரு தலையைக்கிள்ளி எறிய இப்போது எட்டு கண்களோடு இருக்கிறார் அயன். இவை மூலககடவுள் சேதி! பரிவாரங்களின் சேதியை விரிக்கப்புகின் பெருகும், விரியும்.

ஒரு மரத்தடியிலே அமர்ந்துஎதை நினைத்தாலும் அதைப் பெறலாம் அது கற்பக விருட்சம்.

பசுவொன்றுண்டு, கேட்போருக்குக்கேட்டதைத்தரும் — அது காமதேனு? எனவே பொருள்களுக்குக் குறைவில்லை! அதுமட்டுமா? கண்களையும் கருத்தையும் ஒருங்கே பறிக்கும் தேஜோமய திவ்யாலங்கார தேவ மாதர்களாம், ரம்பை, ஊர்வசி, திலோத்தமை, முதலியோர் தும்புரு நாரதர், பாட, நந்தி மிருதங்கம் கொட்ட, ஆயிரம் கண்ணுடையானும் இந்திரன் முன்னால் ஆடுவர், பாடுவர், எனவே போக போக்கியங்களுக்குக் குறைவு இல்லை. காட்சிகளைக்கண்டு கண் அயர்ந்து விடுவோமோ என்ற கவலை இல்லை. ஏனெனில் அங்கு சென்றால் கண் மூடவே முடியாது. நடனத்தைக் காணும் நேரத்திலே சாப்பாட்டுக் கவனம் எடுக்குமோ? இல்லை. பசியிராது, தூக்கமிராது!!

இவ்வளவு வர்ணனையும் மயக்க! மிரட்டவோ எனில் நெருப்புக்குண்டம், கொதிக்கும் இரும்புக் குழம்பு, தேள் நெளியும் பிலம், மற்றும் செக்கு முள்சக்கிரம், பழுக்கக்காய்ச்சியபதுமைகள், மற்றும் பயங்கரமான தண்டனைகள் தரத்தயாராக உள்ள கோரப்பற்களும், கொடுவாள்முகமும் கொண்ட யமதூதர்கள் இருப்பர். இவைகளை நீங்கள் நம்பிவாழவேண்டுமா? இவைதானா திராவிடப் பண்பு என்றுதான் கேட்கிறோம்.

கடவுளின் தன்மையே உருவமற்ற உன்னதம்! அதற்கு ஆரியர்கள் அளந்துள்ள கதைகள் இவைபோன்றன எண்ணற்றன!

அறிவுக்குப் பொருத்தமற்ற இக்கதைகள் மட்டுந்தானா ஆரியத்தின் அழுகு! மேலும் உண்டு.

கடவுள் விஷயம் இது. அரசர் விஷயமோ எனில் அரசர் அந்தணர் சொற்படி நடக்கவேண்டும். ஆட்சியில் வேதியர் வேதமோதவும் வேள்வி செய்யவும் அரசருக்கு அவ்வப்போது உபதேசிக்கவும், அரசர் அந்தணர் விஷயமாகக் குறுக்கிட்டால் சாபமிடும் இருப்பர்! பிறர் தத்தமது குலதர்மத்தைக் கோணாமல் நடத்த வேண்டும்.

சமுதாய சம்பந்தமாக வெனில் நாலு வருணம் இருக்கும்-பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திர என்று. இதிலே பிராமண வருணத்துக்கு மற்ற மூவர் அடிபணிவதுதான் ஆண்டவனுக்கு பிரியமானது! ஏனெனில் பிராமணர், பூதேவர். பிரமன் தன் கால் வழியாக "சூத்திரரை" பூதேவருக்குப்பணிவிடை செய்யவே பிறப்பித்தார்.

பொருளாதார விஷயமாகவோ, பொருள் பெருகும் உழைப்பை சூத்திரரும், பண்டமாற்றும் விவகாரத்தை வைசியரும், பொருளை மாற்றான்கொண்டு போகாதிருக்க க்ஷத்திரியனும், நியமிக்கப்படுவர்.

"மன்னர்! மகேசுரனைக்கொண்டாட, மகத்தானதோர் யாகம்செய்ய வேண்டும். பர்ணசாலைகள் அமைக்கவும், ஹோமகுண்டங்கள் நிறுவவும் தபோதனருக்கு விருந்தளிக்கவும், பூரி தட்சணை தரவும் யாக யோகாதி சாமான்கள் சேகரிக்கவும், பொருள் வேண்டும்" என்று பிராமணர் கேட்பார். கேட்பார் என்றால், இப்போது பார்ப்பனர், பல்லை இளித்துக் கொண்டு பஞ்சாங்கத்தை கட்கத்தில் இடுக்கிக்கொண்டு பதுங்கியதுபோல் பஞ்சைக்குரலில் கேட்கிறார்களே, அதுபோல் அல்ல! இந்த "பாழான" சுயமரியாதை இயக்கம் பண்டு இல்லை! எனவே பிராமணர் முகத்தைமேலுக் குத்தூக்கி, கையைநீட்டி கேட்போர் கலங்கும் விதத்தில் அதிகாரத்தோடு கேட்பார்!

மன்னன், மந்திரியை அழைப்பார்

(2-ம் பக்கம் பார்க்க)

# ஊரார் உரையாடல்

[ஒற்றன்]

[சிங்காரவேலர், வீட்டிலிருந்து கிளம்பி, தன் நண்பர், நல்லண்ணன், வீடு போகிறார், கோயில் கும்பாபிஷேக விஷயமாகப் பேச.]

[அவர், உட்கார்ந்துகொண்டு, "குடி அரசு" பைண்டு வால்யூம்களைப்படித்துக்கொண்டு இருக்கிறார்.]

[சிங்காரவேலர் உள்ளே நுழையும்போதே]

சி:—ஏது! மலைமலையாக எதிரே என்னமோ புத்தகங்களை அடுக்கி வைத்துக் கொண்டீர், வக்கீல் வீடுகளிலே இருப்பதுபோல.

(சிங்காரவேலரை நமஸ்கரித்து, உட்காரச் சொல்லிக் கொண்டே.)

ந:—இவை, வக்கீல் வீட்டுப் புத்தகங்கள்போல அல்ல. அங்கே இருப்பவை, வம்பு, வழக்கு, வல்லடி, இவைகளைப்பற்றி வாதப்பிரதிவாதம் செய்து, பாமர மக்களின் மடியைத் தடவி, பொருளைச் சேர்க்கும் வித்தையைக் கற்றுக்கொடுக்கும் புத்தகங்கள்..............இவை, நமது அறிவை வளர்த்துக்கொள்வதற்காக........

சி:—அறிவு வளர்க்கும், புத்தகங்களா? ரொம்ப நல்லது. திருவிளையாடற் புராணமா?

ந:—திருவிளையாடலைத் தெரிந்து கொள்ளச் செய்யும் புத்தகம்.

சி:—என்ன சொல்கிறீர்.

ந:—ஐயா! இந்தப் புத்தகங்களைப் படித்த பிறகுதானே, தெரிகிறது அந்தப் புரட்டர்கள் செய்கிற அக்ரமம் எல்லாம்; அந்தத் திருக்கூட்டம் செய்கிற தில்லு மல்லு திருவிளையாடல் யாவும், இதிலே தெளிவாக எழுதப்பட்டுள்ளன. படித்த பிறகுதான், பாமரன், ஏன் இவ்வளவு பாரியாகி, திண்டாடித் தவிக்கிறான் என்பது தெரிந்தது.

சி:—ஆவேசம் வந்தவர் மாதிரிப் பேசுகிறீரே, என்ன அற்புதம் இருக்கிறது இதிலே? என்ன பெயர்? யார் எழுதியது?

ந:—ஆவேசமா? ஆமாம், ஆவேசந்தான் வரும், ஆனால் இதிலே ஆண்பனை பெண்பனை ஆக மாறியது, நரி பரியானது, வால் வளர்ந்தது, வைகையைக் குடித்தது போன்ற அண்டப்புளுகுகள் எழுதப்படவில்லை. அறிவு! அறிவு! பகுத்தறிவு! கடவுள் பேரால், மோட்ச நரகத்தின் பேரால், திதி திவசத்தின் பேரால், மதத்தின் பேரால், நமது மக்களை, ஏமாற்றி, ஏமாளிகளாக்கி, அவர்களின் பணத்தைப் பறித்துக் கொண்டு, வாழ்க்கையைப் பாழாக்கி மானத்தைப் போக்கி, விடும், அந்தக் கூட்டம் இருக்கிறதே........

சி:—எந்தக் கூட்டம்?

ந:—பிரம்மாவின் முகத்திலே இருந்து தொப்பென்று கீழே குதித்ததாகக் கூறிக்கொள்ளும், புரோகிதக் கூட்டம்........

சி:—மட மடவென்று பேசிக் கொண்டே போகிறீரே, நிறுத்தி நிதானமாக, விளங்கும்படி சொல்லுங்கள், கேட்பதற்கே கிலியாக இருக்கிறதே, என்னென்னமோ, சொல்கிறீர், வெடிகுண்டு வீசுவது போலவேதானே இருக்கிறது உங்கள் பேச்சு........

ந:—கோயிலிலே வேதம் படிக்கிறார்களே, ஆஹா—ஹ—உ—ஹூ ஹூ என்று அதுபோல, இழுத்துக் கொண்டு இருக்கவேண்டும் என்கிறீரா? அது அந்தத் திருக்கூட்டத்தின் வேலை. ஆத்திரமாகப் பேசுகிறேன் என்றால், (இருதயத்தைக் காட்டி) அவர்கள் செய்த மோசத்தை, சூதை, சூழ்ச்சியை நினைத்தால், மனம், எரிமலை ஆகிவிடுகிறது, நெருப்புப் போலத்தான், வார்த்தை வெளிவரும். ஏழைகளை வஞ்சிக்க ஒரு ஏற்பாடு, அதற்குப் பெயர் மதம்! உழைக்கிறவனை ஒடுக்குவது, அதற்குப் பெயர் ஜாதி! பகற் கொள்ளை அடிப்பது, அதற்குப் பெயர் பூஜை, சடங்கு, தட்சணை! மாட்டுச் சிறுநீரைக் குடிக்கச் சொல்வது, அதற்குப் பெயர், பஞ்சகவ்யம்! அறிவை இழக்கச் செய்வது, அதற்குப் பெயர் அரிகதா காலட்சேபம்! அடா அடா! அந்த ஆசாமிகள், ஒன்றா இரண்டா, செய்திருக்கிற அக்ரமம். இவ்வளவும் தெரியாமலே இருந்ததே, எனக்கு, (புத்தகத்தைக் காட்டி) இதைப் பார்த்த பிறகுதானே தெரிந்தது.

சி:— இதையா? இது, இது, என்று சொல்கிறீர், இது என்றால் என்னய்யா?

ந:—இதுவா? நமது முன்னோர்கள் காலத்திலே இருந்து நாம் சுமந்து வந்தோமே, இழிவு மூட்டைகள், அவைகளை எல்லாம், கீழே தள்ளிவிட நமக்குத் தைரியம் தரும், புத்தகம். குடி அரசு வால்யூம்—திராவிடக் குடி கெடுத்தவர்களின் வண்டவாளங்களை வெட்ட வெளிச்சமாக்கும் குடி அரசு. திராவிட அரசுக்கு, வழிகாட்டுவது.

சி:—(வெறுப்புடன்) அந்த ஈரோட்டு ராமசாமி...........

ந:—ஆமாம்! பெரியார், கைவல்யம், சிங்காரவேலு, முதலிய அறிஞர்களின் அறவுரைகள் உள்ளன.

சி:—(சலிப்புடன்) சரிதான்—(ஒரு விநாடி மௌனம்) படியுங்கள்—(மறுபடி மௌனம்) நீங்களே படியுங்கள்.

ந: —ஏன்? என்ன அவ்வளவு வெறுப்பு, சலிப்பு, களைப்பு, அலுப்பு?

சி:—ஒன்றுமில்லை. நான் மற்றோர் சமயம் வந்து பார்க்கிறேன்.

ந:- செய்யுங்க—நானும் இன்னும் கொஞ்சம் இருக்கு, படித்துவிடுகிறேன். இனிவிஷயம்விளங்கிவிட்டது. விடுவேனா.

சி:- (கொஞ்சம் கோபமாக)

அடே! ஏனய்யா, சும்மா குதிகுதின்னு குதிக்கறே. மகாபெரியபுத்தகத்தைக்கண்டுவிட்டாராம், கண்டு எவனோ ஒரு நாஸ்திகன், என்னமோ கண்டபடி எழுதிவைச்சா அதை எடுத்து வைச்சிகிட்டு, ஆவேசமாடறே..................

ந:- நீங்க, ரொம்பச் சாந்தமாகப் பேசறதா அர்த்தமோ இப்போ.

சி:- (மேலும் கோபமாக)

நானும் நாலுநாழியா கேட்டுகிட்டுத்தான் இருக்கறேன், என்னமோ, உடனே உலகத்தையே தலைகீழா புரட்டிவிடப் போறது போலப் பேசறே.

(ஒரு விநாடி மௌனம்) இதோ பார். நான்தான் கேட்கறேன், சொல்லு, முடியுமா, உன்னாலேதான் ஆகட்டும், இந்தப் புத்தகம் போட்டவங்களாலேதான் ஆகட்டும், முடியுமா—....?

ந:— எது?

சி:— (கேலியாக) எது? எதுவுக்

தான், முடியுமான்னு கேட்கறேன்? அசைக்கக் கூட முடியாதுன்னு நான் சொல்லறேன். எவ்வளவு காலமா ஏற்பட்டது, எவ்வளவு பெரிய பெரிய மகான்கள், மகரிஷிகள், மகாத்மாக்கள் செய்து வைத்த காரியம், எவ்வளவு பிரம்மாண்டமானது, அதைப்போயி, என்னமோ, கிள்ளுக் கீரையாட்டம், எடுத்து வீசி விட முடியும்னு நினைச்சிகிட்டுப் பேசினு,........

ந:— (ஒரு வால்யூமை எடுத்துப் பிரித்து) சும்மா, உட்காருங்கள்; இப்ப நீங்க, கேட்டீங்களேல்லோ, ஒருசந்தேகம், இதோ, இதோ, இங்கே பாருங்கபடித்து, பதில் இருக்கு, மறுக்கமுடியாத வாதம், படித்துப் பாருங்க....

சி:—நீயே, பாரு! நீங்க ஒரு சின்னக் கும்பல் சேர்ந்துகொண்டு, கூச்சல் போட்டா, நடந்து விடுமோ!

ந:—யானை எவ்வளவு பெரிசு, அதைஅடக்கும் அங்குசம் எவ்வளவு சிறிசு! இந்த சின்னக்கும்பல் தான், மதம்பிடித்துத் திரிகிற யானையை அடக்கும் அங்குசம்.

சி:—(முறைத்துப் பார்த்துவிட்டு)

அப்படியான்னு, ஒண்ணு கேட்கறேன் சொல்லு, நம்ம முன்னோர்களெல்லாம், செய்ததை நாம்ப கிளம்பி அழிக்கிறது தான் நியாயமா?

ந:—நம்ம முன்னோர்களா? (புத்தகத்தைப் புரட்டி) இருங்க, இருக்கு, இதற்குப் பதில் இருக்கு இதிலே,

(பக்கங்களைத் தள்ளிக்கொண்டே) யார், என்ன கேள்விதான் கேட்கட்டுமே, இதிலே பதிலா இல்லே, (சிங்காரவேலைப்பார்த்து) நம்மமுன்னோர்களைப் பற்றித்தானே கேட்டீர்கள், இதோ, இப்படி, பாருங்கள் இங்கே........

சி:—நீயே பாரு,....

ந:—ஆமாம், எழுத்து ரொம்பச் சின்னது........

சி:—ஏய்யா! நான் என்னகுருடா?

ந:—நீயே பாருன்னு சொல்லவே, உங்களுக்குக் கண் பார்வை மட்டு போலிருக்குன்னு நினைத்துக்கொண்டேன். கிடக்கு இதைக் கேளுங்க, முன்னோர் முன்னோர் என்று எதற்கு எடுத்தாலும், எந்த விதமான சீர்திருத்தம் பேசினாலும், சிலர், முன்னோர்என்ற வார்த்தையை முன்னாலே கொண்டு வந்து போட்டுக் குழப்புவார்கள். யார் நமது முன்னோர்கள் என்று ஆராய ஆரம்பித்தால் ஒரு முடிவே ஏற்படாது. கடைசியாக அந்த ஆராய்ச்சி, எங்கு கொண்டு போய் விடுமென்றால்,

(சிங்காரவேலர் கேட்டுக்
கொண்டு இருக்கிறாரா
என்று கவனித்துவிட்டு)

தான் படிப்பதை

எங்கு கொண்டு போய்விடுமென்றால், மரக்கிளையிலே கொண்டுபோய்விடும்.

(சிங்காரவேல் திகைக்கிறார்)

ஏனென்றால், டார்வின் என்ற அறிஞரின் ஆராய்ச்சியின்படி, மனிதர்களின் முன்னோர் குரங்குகள்.

(நண்பர் படித்துக்
கொண்டே இருக்க சிங்கார
வேலர் கோபமாக
எழுந்திருக்கிறார்)
(அதைக்கவனியாமலே நண்பர்
படிக்கிறார்)

டார்வின் தத்துவத்தை யாரும் மறுப்பதில்லை, முடியாது. ஆகவே, முன்னோர் முன்னோர் என்ற வார்த்தையின்படியே நாம்நடந்து கொள்வதென்றால், மரத்துக்கு மரமும், கிளைக்குக்கிளையும், தாவிக்கொண்டும், சேட்டைகள் செய்துகொண்டும், பேன்குத்திக் கொண்டும்........ (திடீரெனத் திரும்பிப்பார்க்க சிங்காரவேலர் இல்லாததுகண்டு)

அடே! மனஷன் எழுந்தேபோய் விட்டாப்போலிருக்கு. அவ்வளவு தான், இதை எடுத்தாபோதுமே, சிங்காரவேலர் மாதிரி இருக்கிற கர்நாடகப் பேர் வழிகளெல்லாம், தாசர்களெல்லாம், அலறி அடித்துக் கொண்டு சொல்லாமல் கம்பி நீட்ட வேண்டியதுதான்

(மறுபடியும் புத்தகத்தைப்பிரித்து)

போனால்—போகட்டும், நாம்ப படிப்போம். ரொம்ப அழகாஇருக்கு இந்தக்கட்டுரை.

[உட்கார்ந்துகொண்டு மௌன
மாகப் படிக்க ஆரம்பிக்கிறார்]
[திரைவிழுகிறது]

✻

## வைதீகக் கோட்டையில்
## போராடிய வீரப்புலவர்

சிதம்பரம் இராமசாமி செட்டியார் உயர் நிலைப் பள்ளியைத் துவக்கி, கட்டி நடத்தப் பொருளும் உதவியவர் இந்த நகரில் பல ஆண்டுகள் நகராட்சித் தலைவராயுமிருந்த இராமசாமி செட்டியார் அவர்கள், அவர் தன வணிக செட்டியாராவர்; அந்தப பள்ளியை 7, 8 ஆண்டுககு மேலாக மேற்பார்வை வகிப்பவரும்அந்த வகுப்பினரான இராஜா சர். செட்டியார் அவர்களே ஆகும். அந்தப் பள்ளிக்கு 6, 7 ஆண்டுக்கு முன் ஆசிரியராக நியமிக்கப்பட்டு அடுத்த ஆண்டிலேயே நியமனம் உறுதி செய்யப்பட்டு தலைமைத் தமிழாசிரியராக வேலை பார்த்து வந்தவரான புலவர் நா. மு. மாணிக்கம் அவர்களும் அந்த தன வணிக மரபினரே யாகும். இந்த ஆண்டு சில திங்கள் முன் அவர்கள் மரபிலுதித்த பெண்ணைத் திருமணம் புரிந்து கொண்டார். தலைமை ஆசிரியரிடமோ, பெருவாரியான மாணவர்களிடமோ மிகவும் முறையாகவும் நட்பாகவும் அன்போடும் பழகியே வந்தார். பள்ளிக்கூடத் திட்டப்படி உள்ள சம்பளம் அவர் திறமை — தகுதிக்குப் போதியதல்லவெனக் கண்டு—நிர்வாகிகள் பிரத்தியேகமாக உபரிசம்பளமும் கொடுத்து வந்தார்கள்.

"இளங்கோமன்றம்" என ஓர் அவை அமைத்து ஆண்டுதோறும் சிலபல சிறப்புக்கூட்டங்கள் அமைத்து அதில்தக்க பேராசிரியர்களையும் ஆசிரியர்களையும் கல்வி அதிகாரிகளையும் வழக்கறிஞர்களையும்—பத்திரிகாசிரியர்களையும் தேசியவாதிகளையும் வருவித்து விழாவாக்கி பகுத்தறிவும், தன்மானமும் ஓங்குவதற்கான அறிவுத்துறையில் அவர்களைசொற்பொழிவாற்றக் கோரியவர்களுள் முன்னணியில் இருந்து வந்தார். தனித்தமிழ் பெருங்குடிமக்களது சமூக காரியங்களிலும், மூடப்பழக்க வழக்கங்களை மட்டுப்படுத்த வலியுறுத்திப் பேசுவார்கள். (இதன் காரணமாகத்தான் இருக்கவேண்டும்) நிர்வாகத்தாருக்கு இவரது ஆசிரியப் பதவியில் சில கட்டுப்பாட்டின்கீழ் இவர் வந்தாகவேண்டுமென இவரைப்பற்றி தூபம் போட்டு இடையிலிருந்தோரும் வைதீகத்துக்கு மண்டியிடும் வகையையே எச்சரித்தார்கள் என்றும் அவ்வாறு அந்தப் பதவியில் தொடர்ச்சி செய்யத்தன்னால் தாளாது என்றுகண்டு தன் ஆசிரியப்பதவியை இராஜினமா செய்து விட்டார்களென்றும் தெரிய வருகிறது. அந்தப் பள்ளியில் அந்தமரபினராய் இருந்தஆசிரியர் இவர் ஒருவரே! மேலேகண்டவாறு அறிவு உலகத்தார் ஆமோதிக்கும் முறையில் பணியாற்ற விரும்பும் அவருக்கு மாறாய் நிர்வாகம் செய்திருக்கும் போக்கை மக்கள் ஆங்காங்கு வியந்துபேசிக்கொள்கிறார்கள். நிர்வாகம் புனராலோசனைக்கு வருமோ என்றும் எண்ணவேண்டியிருக்கிறது.

———

Edited Printed Published by C. N. Annaduarai, M. A., at "Dravida Nadu" Press,
317—319 Hodgsonpet Conjeeveram.